உ

சிவமயம்.

ஏகாதசப்பிரபந்தம்.

திருப்பனசை

கண்ணுடையநாயகியம்மை மாலை, பதிகம், கும்மி

சோமீசர் மாலை, பதிகம்

வேங்கடாசல மாலை

இராமானுஜ திரிதச வெண்பா

பெரியகருப்பண்ணஸ்வாமி பதிகம்

குன்றக்குடி யென்னும்

மயூரகிரி முருகக்கடவுள் பதிகம்

சிறுவயல் மும்முடிநாதஸ்வரர் பதிகம்

பாகநேரி புல்வாநாயகி அம்மன் பதிகம்

இவை

திருப்பனசை யென்று காரணப்பெயரெய்திய

நாட்டரசன்கோட்டையிலிருக்கும் இளையாற்றக்குடியிற்

கழனிவாசற்குடியான் நாராயணன் செட்டியாரவர்கள் குமாரர்

ஐயாக்கருப்பன் செட்டியார் அவர்களால்

இயற்றப்பெற்று

ஷெயார் குமாரர்

நாராயணன் செட்டியார் அவர்களால்

மதுரை, மீனலோசனி அச்சியந்திரசாலையில்,

பதிப்பிக்கப்பெற்றன.

விபவஹு பங்குனி

உ

சிவமயம்.



உ

சிவமயம்.



மகா-௱-௱-ஸ்ரீ

ஐயாக்கருப்பன் செட்டியார் அவர்கள்.

சாற்றுக்கவிகள்.

சிவகங்கை மகா-ா-ா-ஸ்ரீ

நா. க, சே, சேதுப்பிள்ளை அவர்கள் இயற்றியவை,

அறுசீர்க்கழில் நெடிலாசிரிய விருத்தம்.

மணிகொழித்து வரம்புயர வளையுழலும் பணைவளத்தின்
மன்னி மிக்க
அணிகெழுமம் மலர்மங்கை யருளுறைக்கிற் பனசைநக
ரமையச் சேவின்
கணினழுத்தக் கருணைபுரி கண்ணுடைய நாயகிபொற்
கமல பாதப்
பணிபழுக்கும் படிமாலை பதிகமிசைக் கும்மியெனப்
பகர்ந்த மூன்றும் (க)

துங்கமதம் பொழியவரு தோலாடைச் சோழீசர்
தூய பாத
பங்கயத்தைப் பணிந்தேத்தும் பண்மாலை பதிகமெனும்
பா விரண்டும்
வெங்கதிரைப் பகன்மறைத்த வேங்கடவர் மாலையொன்றும்
விளங்கு சீர்த்தி
தங்குமிரா மானுசன்றன் சந்ததிரி தசவெண்பாச்
சாற்ற தொன்றும் (உ)

அய்யனரி கான்றளத்துக் கதிபனயி ராணிக்கா
யசமு கத்தி
கையரிந்த பெரியகருப் பணசாமிக் கருட்பதிகக்
காட்சி யொன்றும்
மெய்யறிவா ரறிகுன்றை வேலவர்மேற் பதிகமென
விரித்த வொன்றும்
வையமகிழ் சிறுவயல்மும் முடிநாதர் பதிகமென
வரைந்த வொன்றும் (ங)

போகநே ரிமையவரும் புதுமைநக ரெழிலென்னப்
புகுந்து நோக்கும்
பாகநே ரியிற்புல்வ நாயகிதன் பதம்பணியப்
பதிக மொன்றும்

சோகமே ராவமுதஞ் சொரிந்தினிய பதங்கடொறுந்
துளிப்பக் கேட்போர்
ஆகநேர்ந் தனவரத மன்பொழுகக் கசிந்துமனத்
தறிவு மல்க. (ச)

எண்ணியநால் வகைச்சொல்லும் இதம்படவைத் தீரைந்தா
மெழிலு மேந்த
நண்ணியவெண் சுவைத்தொடரு நாலெட்டா முத்திபெறு
நலமுந் தோன்றக்
கண்ணியவைந் திலக்கணமு மிலக்கியமு நெறியுடனே
கலந்து மேவத்
தண்ணியமுற் குணமருவித் தந்திடுநூல் தந்துபுகழ்
சார்ந்தா னம்மா. (ரு)

அன்னவனு ரெனிற்றன்னை யடுத்தவர்க்கு வரையாம
லளிக்கும் வள்ளல்
சொன்னயமும் பொருணயமு மிகமலியக் கவிசொல்லுந்
தூய நாவான்
எந்நலமும் பலநாளு மியற்றுபவ னீசனருட்
கியைந்த நேசன்
நன்னலமார் வணிககுல நாயகமய் யாக்கருப்ப
நலத்து நாமன். (சு)

திருவுறைபு மணிமார்பன் தேவரையு மசுரரையுஞ்
சேரக் கூட்டி
மருவுறையாப் பாற்கடலை மந்தரத்தாற் கடைந்தமுதம்
வானோர்க் கீந்தான்
செருவுறைபு மனத்தவுணர் நிலைநோக்கித் தானுவினுற்
செகத்தில் யார்க்கும்
கருவுறையா விக்கவிஞன் கலைக்கடலைக் கடைந்தமுதங்
கழியா தீந்தான். (எ)

பத்தியினு லேகதச பிரபந்த மெனுமிந்நூல்
பாட வெண்ணிச்
சத்தியுள நாற்பயனுந் தோன்றமொழிந் தானதனுற்
றெல்லோ ரேத்து

நத்துமொரு கனிபாகும் நறுந்தேனு மிதுவன்று
நமக்கு வாய்த்த
தித்திப்பே அதிகமெனச் சிந்தைகனிந் திந்நூலைச்
செப்பி னானே. (அ)

இத்தகைய பிரபந்த மெல்லவர்க்கும் ஒருங்கெய்த
வெண்ணி யந்த
உத்தமன்ற னற்புதல்வன் நாராணனு மென்றுரைக்கு
முறுதிப் பேரான்
முத்தமிழு முணரறிவன் முக்கண்விநா யகனடியே
முன்னி வாழ்வான்
பத்தியுடன் சேர்த்தெடுத்துப் பரிவினா லச்சதனிற்
பதிப்பித் தானே. (௯)

இந்நூ லியற்றியவர் குமாரர்

நாராயணன் செட்டியாரவர்கள் இயற்றியது.

ஆசிரியவிருத்தம்.

சீர்மேவு பனசைநகர் மேவிவளர் சோழீசர்
செய்யபா மாலை பதிகம்
திரிசூலி கண்ணுடைய தேவிபதி கம்கும்மி
திகழ்மாலை வேங்க டேசர்

பார்பரவு புகழ்மாலை ராமானு ஜத்திரதச்
பண்புமிகு வெண்பா வுடன்
பங்கயத் திறைவிபுதல் வன்பேர் கருப்பண்ண
பார்த்திப னுவந்த பதிகம்

காருலவு பொழிற்குன்றை முருகேசர் பதிகமும்
கவினரசர் சிறு வயலெனும்
கடிநகரி லுறையுமும் முடிநாதர் பதிகமுங்
கருதுபா கைப்பதியில் வாழ்

ஏர்மேவு புல்வநா யகிபதிக முங்கூட
ஏகதச பிரபந்த மாம்
இந்நூலை எந்தைமொழி யக்கவிஞர் செவிமடுத்
தின்பமுற் றனர்வாழி யே.

உ

கணபதி துணை.

திருப்பனசைக் கண்ணுடையம்மை மாலை.

காப்பு.

கட்டளைக்கலித்துறை.

பொன்னு கமமறை யின்னெலி யார்பன சைப்புரியின்
மின்னுக மங்குற் றனுமே வியகண் ணுடையவண்மேற்
பன்னு கமழ்தரு பாமாலை யானின்று பாடுதற்குத்
தொன்னுக மன்ன முகவைங் கரன்றாட் டுணைதுணையே.

நூல்.

திருமா தணிசெயப் பாமகண் மேவத் தினந்தினமும்
அருமா தவரும் மிகுயோகு செய்திட வங்குணத்தின்
வருமா தவற்கண்டு பங்கயம் பூப்ப வளர்பனசைப்
பொருமாத ரார்ந்தகண் ணனந்தி பொற்பதம் போற்றுவனே. (க)

அருங்கா னகத்தி லரிமீதி லூர்ந்தன்ப தாகவின்பந்
தருங்கான மோதுவ ருள்ளே யுறைந்துந் தட்மதில்சூழ்
மருங்கான தாலப் பதிநகர் மேவியும் வன்கணமன்
வருங்கானந் தீவினை தீர்க்குங்கண் ணனந்தி மால்கழலே. (உ)

மணங்காதம் வீசலர்க் காக்கணஞ் சூழும் பனசைவந்து
வணங்காத வன்னெஞ்ச ருக்கரி யாயுனை வாழ்த்துமென்பாற்
சுணங்கா தருள்செயத் தோற்றியு மந்தகன் றெல்பிணியால்
அணங்காத தீர்த்தென்னை யாள்வாய்கண் ணனந்தி யம்பிகையே. (ங)

விண்டலந் தோய்ந்தும்பர் நாட்டினிற் கோடுகண் மென்னிழல்செய்
தண்டலை தந்த மதுப்பணை சேர்ந்துசெஞ் சாலிதரக்
கொண்டலை வானைச் சுரபியை நாணக் கொடுப்பவரும்
மண்டலை சூழும் பனசையில் வாழுங்கண் ணனந்தியே. (ச)

காவிக் குலங்கஞ்ச மேற்பூத்த தென்னக் கமலமிசை
மேவிக் களிவண் டினந்தேற லுண்டொலி மிஞ்சவன
மாவிக் கிசைந்ததன் பேட்டினைத் தேடிவந் தங்குறையும்
வாவிக் குழாங்க ணிறைதாலம் வாழுங்கண் ணுனந்தியே. (ரு)

நாலா கலைதெரி நாவாண ரும்மற நன்னெறிசேர்
மேலா மறிவின ருந்துற வோரும்வில் வேள்வடிவக்
கோலா கலக்கும ரருந்திரு மின்னென் கோதையரு
மாலா யுறைந்திடுந் தென்றாலம் வாழுங்கண் ணுனந்தியே. (சு)

கூவாலை யங்களிற் சென்றே யலைந்துகை கூப்பிநின்று
தேவா வெனக்கருள் செய்யென வேண்டிட வோர்செயலும்
மேவாம லுன்னிடம் வந்திடு வோர்வினை தீர்த்திடுவாய்
பூவா சனைமன் பனசைப் புரியிற்கண் ணுனந்தியே. (எ)

வன்னியும் பூவையும் வேதாக மங்களை வாய்திறந்து
தன்னியல் பாமிசை குன்றா துரைக்கத் தனிக்கமுகின்
நன்னயங் கன்னற் குலங்காட்ட நத்துமுத் தீன்றிடவும்
மன்னிய தாலப் பதிவாழு கின்றகண் ணுனந்தியே. (அ)

கஞ்சா சனத்தனங் காவா சனத்தன் கடவுளர்செம்
பஞ்சாய நின்திருச் சேவடிக் கன்பு பதித்திடவே
அஞ்சா யுதர்க்கிளை யாயவர் வேண்டும் வரமளிப்பாய்
மஞ்சாரு சோலை வளஞ்சேர் பனசைக்கண் ணுனந்தியே. (சு)

இல்லா வறுமையி னாலே யுழன்று மிதயம்வெம்பிச்
சொல்லாட லின்றி வருவோர்க் குதவுஞ் சுகுணமுள்ள
நல்லார் களுநடுக் குன்றாது நீதியை நாடுகின்ற
பல்லோரெக் காலமும் வாழும் பனசைக்கண் ணுனந்தியே. (ய)

இல்லாக் கயவர் கரவோ ரிழிகுலத் திற்கசடர்
செல்லா நெறியிற் புகுவோர்க ணட்பினிற் சென்றலைந்து
நல்லோ ரிணக்க மறியா வெனக்கரு ளுடிடுவாய்
அல்லார் குழற்றிரு வேதாலம் வாழுங்கண் ணுனந்தியே. (யக)

தேனே யினிய வமுதே கன்றருந் தெள்ரசமே
மானே மரகத வாண்மயி லேவன மாமனமே
மேனாள் விண்ணயினிற் றானே யுழனுமென் மேலருள்செய்
வானூடர் போற்றப் பனசையில் வாழுங்கண் ணனந்தியே. (௰௨)

கள்ளாருங் கூந்த லணங்கே யுனதுகஞ் சத்தடமுட்
கொள்ளா தறநெறி செல்லாது கோலநின் னமமென்றும்
விள்ளா துழனு மெனக்கருள் செய்திட வேவிமலை
வள்ளா யுதவு பனசையில் வாழுங்கண் ணனந்தியே. (௰௩)

பூசனை செய்துனைப் போற்றிப் பணிந்துநின் பொன்னடிக்கே
வாசனை யாரு மலர்தூவி யேத்தும் வழியறியேன்
நேசனைப் போற்புவி மீதே நடித்து நிதமலையும்
மாசனை யாள வருவாய் பனசைக்கண் ணனந்தியே. (௰௪)

மெய்காட்டி மேக நிறக்குழல் காட்டிமென் வண்டணியுங்
கைகாட்டிக் கஞ்ச முகைமுலை காட்டிக் கலைமதியின்
ஐகாட் டியமுக முங்காட்டு மாதர்க ளாசையென்பான்
மைகாட் டுதறவிர்த் தாடாலம் வாழுங்கண் ணனந்தியே. (௰௫)

செந்தா மரைநிகர் நின்பாதப் போதினைச் சிந்தைசெய்ய
வந்தார் மிடிப்பிணி தீர்த்தருள் ரூவி வராகிநடு
தந்தார் மலர்க்குழற் றேவிகங் காளிநற் சத்திகன்னி
மந்தா கினியெனத் தென்றலம் வாழுங்கண் ணனந்தியே. (௰௬)

ஓயாப் பவப்பிணி யாலே புவியி லுழன்றுதினந்
தாயார் வயிற்றிற் பிறந்தே யிலைந்த தமியனெனை
மாயா வுலக மதில்வருந் தாதுநன் மார்க்கமதை
வாயாற் றிறந்தருள் செய்வாய் பனசைக்கண் ணனந்தியே. (௰௭)

வருமா மகிட னுயிர்போக்கி யும்பர்கள் வாசவன்பொற்
றிருமா லயன்முத லோர்துயர் தீர்த்திடும் தேவியென்பால்
தருமா விருனைத் துறந்திடச் சிங்கந் தனில்வருவாய்
அருமா தவப்பொரு ளேதால மேவுங்கண் ணனந்தியே. (௰௮)

வேலைக் கயலைப் பொருவுகண் ணார்தெட்டும் வேதனையான்
மாலைக் கொடும்புவி மீதே யுழல்வல் வினையனென்பாற்
சோலைக் கிளியென நீவாய் திறந்தஞ்ச லென்றுசொல்வாய்
வாலைச் சிறுபெண்ணென் றேதாலம் வாழுங்கண் ணுனந்தியே. (௧௯)

வந்தந் தருமலர்ச் சேவடி போற்றி வருந்திநிற்க
அந்தந் தருமிரு பார்வையு மீந்தன் றருள்சுரந்து
கந்தந் தருக்குங் குழலணங் கேகடை யேற்குவரும்
அந்தந் தருமன ணுகா தருளுங்கண் ணுனந்தியே. (௨௰)

பூத்தா வடியர் தனக்கிளை யாயுன் புகழ்படிக்க
நாத்தா வடிதமிழ்ச் சொல்வரந் தாவனை நாடியன்பாய்
ஏத்தா வடியர்கட் கெட்டாயென் பாலிரங் காததென்ன
கூத்தா வடிதிரி சூலங்கைக் கொண்டகண் ணுனந்தியே. (௨௧)

கனகக்கன் மீதினிற் கோட்டான் மறைதனைக் கண்டெழுதும்
அனகக் கனமெய்ய னைப்பாணி யானை யருண்முதல்வி
பனகக் கலனணி பைங்கிளி யேதினம் பாவியென்பான்
மனகக் கசடகல் விப்பாய்கண் ணுனந்தி மாமயிலே. (௨௨)

திருவுங் கலையுந் தமக்கே பதியி தெனத்தெளிந்து
மருவுங் குயிலு மனமுங் கிளியு மயிலுமயிற்
பொருவுங்க ணார்க்குடைந் தோடும் வளங்கள் பொருந்திநிதம்
வருபுங் கவர்புனட சூழ்தாலம் வாழுங்கண் ணுனந்தியே. (௨௩)

மாலைக் கரும்பு மலர்ந்தெழில் காட்டும் பனசைவந்து
வேலைக் கருங்கு வளையைப் பழித்த விழியெனத்தோன்
றாலைக் கருதி யடிதொழு வார்க்கு நவலவொண்ணா
ஆலைக் கரும்பு ரசமெனத் தோன்றுங்கண் ணுனந்தியே. (௨௪)

கத்துங் கருங்கட னேராக னம்புய முங்கனகம்
பத்துங் கருக்கல் பெறப்பணித் தானுடற் பாதியினில்
எத்துங் கருந்தொழ வேய்ந்தும் பனசை யிருந்தவனை
நத்துங் கருத்தெனக் கீவாய்கண் ணுனந்தி நாயகியே. (௨௫)

அஞ்சக் கரத்தர னங்கத்தின் மேவியு மானைமுகப்
பஞ்சக் கரத்தனை யாறு னனத்தனை யும்பயின் றுஞ்
செஞ்சக்க ரத்தரி பின்னையு மாகித் தினம்பணிவோர்
வஞ்சக் கரவினை மாற்றுங்கண் ணுனந்தி மாலினியே. (உசு)

வஞ்சத் தவவடி வாகிமுன் னேய்வனம் வந்துமிகை
மிஞ்சத் தவறு மிதிலேசன் மாமகள் பால்விளைத்த
கொஞ்சத் தவனுயிர் கொன்றேற் கிளைய குணக்கடலென்
னெஞ்சத் தவந்தவிர்த் தாள்வைநன் னீலிகண் ணுனந்தியே. (உஎ)

சோதித் தனந்த முறைபார்த் தடியவர் தூய்மைகண்டு
நீதித் தனந்தனை யப்பே றளித்து நெருங்கிவரும்
மேதித் தனந்தகன் வல்வினை தீர்க்கும் விமலியருள்
ஆதித்த னந்த வொளியாருஞ் சூலிகண் ணுனந்தியே. (உஅ)

அஞ்சங் கரிநடை மின்னுர்க ளாரர வல்குலின்ப
வஞ்சங் கரியென நாடார்கள் வேண்டு வரமளிக்குங்
கஞ்சங் கரிய தெனவே பழித்த கழலுடைய
அஞ்சங் கரியெனை யாடால மேவுகண் ணுனந்தியே. (உகூ)

பொருகே தனத்தெழில் வேதாள மேவிய பொற்கொடியென்
அருகே தனத்தைய ளார்புரி தீவினை யந்தகனுல்
வருகே தனந்த வரநீ யளித்து வழுவகன்ற
உருகே தனமெனக் கீவாய்கண் ணுனந்தி யுத்தமியே. (ஙய)

பூவைக் கரும்புவிற் சேர்த்தெய்யும் வேளைப் பொரிவிழியான்
மாவைத் துகளை நிகராக வேசெய்த வள்ளன்மெய்யிற்
சேவைக் கிசைந்த வழுதே யடிமைசொற் செந்தமிழாம்
பாவைப் பரிந்துகைக் கொள்வாய் பனசைக்கண் ணுனந்தியே. (ஙக)

உ

கணபதிதுணை.

திருப்பனைசைக்

கண்ணுடையம்மை பதிகம்.

காப்பு.

வெண்பா.

பண்ணுடையாழ் கொண்டுதுதி பண்ணுமடி யார்க்கருளுங்
கண்ணுடையான் மீதுபதி கம்புகல—விண்ணிறைக்கா
மாவா ரிதியருந்தி வண்கரக நீர்கவிழ்த்த
பூவா ரிசத்தடங்காப் பு.

ஆசிரிய விருத்தம்.

பூரணி பராசத்தி திரிசூலி கௌமாரி
புவனமெங் கணுநி றைந்த
புங்கவ கோணிதிரி நயனியரி வாகனி
புனிதசங் கரி குமாரி
நாரணி மதங்கிபை ரவிநீலி யபிராமி
நான்மறைத் தலைவி தேவி
நம்புமடி யார்களுக் குதவிய சடாட்சரி
நற்கருணை வாரி வாலை
தாரணித் திடுகன்னி சுந்தரி சவுந்தரி
தக்கபஞ் சாக்க ரத்தி
தற்பரா னந்தியுமை கங்காளி வேதாளி
தாண்டவம தாடு செல்வி
காரணி யனந்தகுண கல்யாணி சாமுண்டி
கனமகிட வசுர வைரி
கஞ்சாச னன்குலிச னஞ்சாயு தற்கரிய
கமலைபன சைக்க ணுமையே. (க)

வான்றடவி நிற்கின்ற சோலைகளு மத்தருவின்
வழிவந்த மதுவாரி யால்
வண்மைபெறு தண்பணையி னிற்சென்று செஞ்சாலி
மருவுமுப் போகம் வளரும்
பானிற நிறைந்தமதி மண்டலம ளாவவரு
பரிவான மாட மனையும்
பைங்கிளி நிகர்த்தமொழி மங்கையர் வனப்பினைப்
பகரவரி தாயி ருக்கும்
மான்மகனை யொத்தவடி வாகின்ற மானவர்கள்
வார்த்தைபெச காத நலமும்
மதித்தள வுரைத்திட வடங்காத கனகத்தின்
மகிமைநல் லறிவின் வாய்ப்பும்
கானமதி ஞாத னெனக்கருது பெருமையுங்
காட்டுமிப் பதியி லென்றுங்
கஞ்சாச னன்குலிச னஞ்சாயு தற்கரிய
கமலைபன சைக்க ணுமையே. (௨)

கொண்டறனை யொத்தகுழல் கெண்டையை நிகர்த்தவிழி
குமிழதனை யனைய நாசி
கோகனக மானமுகம் வாகுமிட றங்கமுகு
கோலமிகு காது வள்ளை
கண்டுமொழி யாம்பவள மாகுமிதழ் யாவருங்
கருதரிய முத்து மூரற்
களபமணி கொங்கையிரு கும்பமென லாமுபய
கைகணிறை செங்காந்த ளாம்
பண்டரி துயின்றவட வாலிலைய தாம்வயிறு
பசியகொடி யாகு மிடையே
பணியெனவு மல்குலார் வாழையிரு தொடைகளாம்
பகரலவ ணமு முந்தாள்
கண்டவர் மயங்கெகின நடைகாட்டு மாதர்தங்
காதநீர்த் தெனை யாளுவாய்
கஞ்சாச னன்குலிச னஞ்சாயு தற்கரிய
கமலைபன சைக்க ணுமையே. (௩)

மிடியர்க டமைச்செல்வ ராக்குவாய் மூடர்களை
மெய்யறிவ ராக்கு விப்பாய்
மெத்தப் பயந்துபல மற்றவரை மிகுசத்தி
மானென விளக்கி வைப்பாய்
மடியரை முயற்சியில் வலுத்தவர்க ளாக்குவாய்
மானவர்க ளான வமிலர்
மாந்தரிட மாறாத காமாவி காரத்தை
வந்துகுடி கொள்ள வைப்பாய்
படிமிசையி னின்னடி வணங்குமடி யார்கள்பெண்
பற்றிலனு காமல் வைப்பாய்
பாவிநல் வழிசேர வைக்குநின் னருளினைப்
பகர்ந்திட வெவர்க்கு மெளிதோ
கடிமலர் செறிந்தமா மாலையணி தேவியே
கருணைவைத் தெனை யாளுவாய்
கஞ்சாச னன்குலிச னஞ்சாயு தற்கரிய
கமலைபன சைக்க ணுமையே. (ச)

அண்டர்கட் கரிதான மானிடப் பிறவிதனில்
யானடிமை வந்து தித்தும்
அத்துவித சாத்திரத் துண்மையை யறிந்துநின்
னடியிணைக் காளா கிடுந்
தொண்டர்பணி செய்யவறி யாமலே வாரித்
துரும்பாக நித்த நித்தந்
தொல்லுலகில் வாடுவது மதியின மோமெய்ம்மை
தோயாம லோவல் லது
முண்டக மலர்ப்போத னன்றெழுதி வைத்ததோ
முன்செய்த தீவினைய தோ
மூடனறி யேனிதைத் தேறுதற் கின்றுநீ
முழுமதியெ னத்தோற்று வாய்
கண்டவர்க டஞ்சிரம் விட்டியவ ராகியே
கருணைவைத் தெனையாளு வாய்
கஞ்சாச னன்குலிச னஞ்சாயு தற்கரிய
கமலைபன சைக்க ணுமையே. (ரு)

பூதலந் தனிலாசை கொண்டுநின் றுழல்வனே
பொற்பணி தனக் குழல்வனே
போருமை யாகின்ற பேய்பிடித் துழல்வனே
பொறையறிய னென் றுழல்வனே
மாதாத ரத்தமுதம் வேண்டிநின் றுழல்வனே
மலமாயை யாலுழல்வ னே
மரிகால மெதிர்கால நிகழ்கால மாகின்ற
வகைபுரிய னென்றுழல்வ னே
வேதன்விதி யால்வந்த தந்தைதாய் மகமனைகண்
மேற்காதல் கொண்டுழல்வ னே
மெய்யெலாம் வாயாய்ப் பிதற்றியலை கின்றதிது
வீண்கால மென்றுழல்வ னே
காதுவே லெனநின்ற கண்ணுடைய சூலியே
கருணைவைத் துதவி புரிவாய்
கஞ்சாச னன்குலிச னஞ்சாயு தற்கரிய
கமலைபன சைக்க ணுமையே. (கூ)

வற்றன்மர மாகிப் புலர்ந்தடிமை நிற்கின்ற
வண்மைநீ பார்க்க விலையோ
வஞ்சருற வால்வருஞ் சஞ்சலத் தான்மனம்
வருந்துவது பார்க்க விலையோ
குற்றமிகு வஞ்சியர்கள் குற்றேவ லாய்நின்ற
கொடுமைநீ பார்க்க விலையோ
கூசாத வாசாபி சாசெனுங் காசாசை
கொண்டலைதல் பார்க்க விலையோ
நற்றவ முயன்றுபுலன் வென்றவர்க ளிட்டபணி
நாடாமை பார்க்க விலையோ
நானெனு மகந்தையால் வீணாய் நிற்கின்ற
நலிவுநீ பார்க்க விலையோ
கற்றவர் துதித்திடும் வாலையுனை நம்பினேன்
கருணைபுரி யிதுசமய மே
கஞ்சாச னன்குலிச னஞ்சாயு தற்கரிய
கமலைபன சைக்க ணுமையே. (எ)

தாயிலா மைந்தனைப் போலுமுறை யிடுகின்ற
தன்மைநீ கேட்க விலையோ
தமியனு னலறுவது கேட்டுவந் துன்னடியர்
சாற்றவு நினைக்க விலையோ
பாய்மரக் கலமீது வேலையுழல் காகமாய்ப்
படுதுயர மறிய விலையோ
பஞ்சமா பாதக ருடன்கூடி யான்படும்
பாடொருவர் சொல்ல விலையோ
நாய்நரிக ணமதென்று நாடுமுட னிதென்று
நாடுவது பார்க்க விலையோ
நம்புமடி யேன்றனைக் காப்பதுன் கடமைமறை
நாடுதற் கரிய பொருளே
காய்ந்துசின மானவேற் கைகொண்ட வசுரனைக்
காலனுல கடைய வைத்தாய்
கஞ்சாச னன்குலிச னஞ்சாயு தற்கரிய
கமலைபன சைக்க ணுமையே. (அ)

இல்லாமை யென்னும் பெரும்பிணிக் கலைவனே
விரைதேட நின்றலைவ னே
யீசனடி யார்களடி நித்தமும் வணங்கா
திருந்திடு குறைக் கலைவனே
பொல்லாத மாந்தருற வானதற் கலைவனே
புந்தியில னென்றலைவ னே
புனிதநிறை வாவிதனின் மூழ்காம லேநின்ற
புன்மையை நினைந்தலைவ னே
செல்லாத வழிதனிற் சென்றுநின் றலைவனே
செகவாசை யாலலைவ னே
சிற்றறிவ ராகின்ற பூரிய ரிடஞ்சென்று
சேவித்து நின்றலைவ னே
கல்லாத மாந்தர்கட் பாலலைந் தேதுயர்க்
கடலின்மூழ் காதருளு வாய்
கஞ்சாச னன்குலிச னஞ்சாயு தற்கரிய
கமலைபன சைக்க ணுமையே. (கூ)

அற்பமாகியவாவி யுடைபட்டு வாரியி
லடைந்திடி னதைப்பொ ருதோ
அத்தகைமை யொத்துனரு ளானந்த சாகரத்
தியான்வந் தடைந்தி ருந்தாற்
பற்பலர்க ணிந்தையிது வென்றுசொல் வார்களோ
பங்கமுனை வந்தடையு மோ
பத்திவழி யறியாத வஞ்சனிவ னென்றுனது
பத்தர்கள் பகர்ந்திடுவ ரோ
நற்பாவ மில்லாத துஷ்டனென் பார்களோ
ஞாயமில யிதுவென்ப ரோ.
நஞ்செனநன் மேலோ ரிகழ்ந்திட்ட கன்னியரை
நாடினவ னிவனென்ப ரோ
கற்பிளவெ னப்பொறையி லாமுட னுமெனைக்
காத்திடக் கருணை புரிவாய்
கஞ்சாச னன்குலிச னஞ்சாயு தற்கரிய
கமலைபன சைக்க ணுமையே. (ய)

உ

கணபதி துணை.

திருப்பனைசைக்

கண்ணுடையம்மை கும்மி.

காப்பு-வெண்பா.

நாட்டரசன் கோட்டைக்கண் ணுத்தான் மதகாவுள்
நாட்டரசன் கோட்டைக்கண் ணுத்தாண்மே—லீட்டுகும்மி
சொல்லத் துதிக்கையன்பர் தூயமனத் தாளனதுட்
புல்லத் துதிக்கையன்காப் பு.

கும்மி.

செந்திரு நாமகண் மேவும் பனைசையிற்
றேவி யெனுங்கண் ணுடையவண்மேற்
சிந்தை மகிழ்தமி ழூற்கும்மி யான்சொலத்
தேசிவி நாயகன் காப்பாமே. (க)

சீலமி குந்தாலக் கண்ணுடை யாண்மிசை
செந்தமி ழூற்கும்மிப் பாட்டுரைக்கக்
கோலம யின்மிசை யேறிவ ருங்குகன்
கோகன கத்திருத் தாடுணையே. (உ)

பூசுரர் மாதவர் போற்றும் பனைசைநற்
புங்கவி யாங்கண் ணுடையவண்மேற்
றேசுல வுங்கும்மி யான்புக லவருட்
டேவன்சோ மீசனுங் காப்பாமே. (௩)

முடுகு. ஆசைவானவர் பூசையேபுரி தேசிதாசர்க
ணேசியாய்வள ரம்பிகை கண்ணுமை மேற்கும்மிக்கு
மாசிலாமயில் பேசுநற்குயி லோசையைத்தரு வாசகத்திரு
வாலை சிவகாமி காப்பாமே. (௪)

அந்தகர் கண்டுயர் தீர்த்திடுங் கண்ணுடை
யாண்மிசை யான்கும்மிப் பாட்டுரைக்க
நந்தனற் செந்திரு மார்புறை யும்வெங்க
டாசல நாதனுங் காப்பாமே. (௫)

நாவலர் வேண்டிய நல்வர மீந்திடு
நாயகி கண்ணுடை யாள்குமிக்கு
மாவல னெங்கள் பெரிய கருப்பண்ணால்
வானவன் றண்மலர் காப்பாமே. (௬)

பொல்லா மிடிதனைத் தீர்த்தடி யார்க்கருள்
பூரணி கண்ணுடை யாள்குமிக்கு
வல்ல வரிகர சேயா முருகா
வலவன் பொற்பதங் காப்பாமே. (எ)

அண்டர் முனிவர்கள் போற்றுங்கண் ணம்பிகை
யாமன்னை மேற்கும்மிப் பாட்டுரைக்க
வண்டுறை மாலை யணிகுரு நாதனம்
மாமலர்த் தாளிணை காப்பாமே. (அ)

பொங்குந் திருநாளி லவித்த நென்முளை
பூர்தல்செய் கண்ணுடை யாள்குமிக்குச்
செங்கம லத்தான் முனியாண்டி காளி
தேவி யிவர்கள் பதந்துணையே. (௯)

பாலடு பாகிணை யாமொழிக் கண்ணுடைப்
பைங்கிளி மேற்கும்மிப் பாட்டுரைக்க
ஆலடி யானென வாழுங் கருப்பைய
னம்பொற் கழலிணை காப்பாமே. (௧௦)

முடுகு. நாடும்புகழ் தேடுங்கவி பாடுந்தமிழ் கூடுங்குண
நாவலர் முன்னெழி லாமயில்தான்
ஆடும்படி சாடுந்திற லூடுந்தின மோடுஞ்சிறி
தாகிய வான்கோழி போலடியேன். (௧௧)

பத்தர்க் கருள்புரி பைங்கிளி யாள்கண்டு
பாகு கனிமிக ராமொழியாள்
சத்திகண் ணம்மை கும்மிகூ றப்பன
சைப்பதி தன்னி லதிதீர. (கஉ)

நாராய ணன்வணி கன்சே யனிந்த
நற்றமி ழாற்கவி சொல்வாயன்
தேருங் கருப்ப வணிக னுரைக்குமிச்
செந்தமிழ்க் குத்துணை நாமகளாம். (கங)

நாரணி கண்ணுமை கோலமுந் தால
நன்னகர் நாட்டனு கூலமுடன்
தாரணி யிற்றினம் படிக்க வேமிகு
சந்தோஷ மாய்க்கும்மி யடிக்கவே. (கச)

அஞ்சுகம் போனுரை நாகவல் லிமட
வன்னமெ னுநடைத் தோகைவல்லி
கஞ்ச முகமலர்க் காமாட்சி முகில்
காட்டு மளகவி சாலாட்சி. (கரு)

முடுகு. காவிற்குயில் கூவற்கிணை பாவைப்புக லாவற்பெறு
கந்த நிறைந்திடு நாகரத்னம்
வாவிற்கய லேயொப்பென பூவிற்புக ழேபெற்றிட
வாய்த்த விழியின்மா ணிக்கரத்னம். (கசா)

அன்னமுத் தேயடி சொர்னமுத் தேவயி
ரூவிலே போன்ற மருதமுத்தே
மின்னுந் துடியிடை யாராயி கையை
வீசி நடந்திடு வீராயி. (கஎ)

தந்தை யனேகவப் பெண்ணு கிப்புவி
தன்னி லுதித்திடுங் கண்ணுயி
சிந்தையின் மிக்க வுறமாகித் திட
மாய்மொழி செப்பும் பரமாயி. (கஅ)

காதலர் மேன்மிகு மாலா கிக்கரங்
காட்டி யழைத்திடும் வேலாயி
சூது நிகர்தன ராக்காயி களி
தோன்று மனதுள மூக்காயி. (கக)

மக்கள் வளர்க்கும் விருப்பா கிமன்னே
வாழ்க்கை புரியுங் கருப்பாயி
துக்கமி லாமனத் தேனுச்சி யொளி
தோற்று மினலிடை மீனுட்சி. (உ0)

முடுகு. கண்டத்தொனி கண்டுக்கிணை கொண்டப்புறை கொண்டற்கு
காலனெனும்விழிக் காமவல்லி (மூற்
விண்டத்தனை கொண்டற்கடி யென்றர்ச்சனை யொன்றப்புரி
மின்னலெனுநடுச் சோமவல்லி. (உக)

எல்லோரு மாய்வந்து கூடுங்க டிசுக
மீபுநற் செங்கைநீ ராடுங்கடி
நல்லகொச் சிமஞ்சட் பூசுங்க டிநய
மாம்பட் டுடுத்தியே பேசுங்கடி. (உஉ)

கொண்டையிற் பூவினைச் சூட்டுங்க டிதனக்
குன்றில் ரவிக்கையை மாட்டுங்கடி
தண்டையிட் டுக்காலின் மிஞ்சியிட் டுமுத்துச்
சரத்தை மார்பினிற் றெங்கவிட்டு. (உங)

பாடக மிட்டுவண் டிட்டுக் கணையாழி
பாங்குட னிட்டுப் பதக்கமிட்டு
ஆடக மேலிடு கொப்பிட்டுத் தண்டொட்டி
யணிந்து கஸ்தூரிப் பொட்டுமிட்டு. (உச)

முடுகு. பூசித்திடு தாசர்க்கெழி னேசத்தொடு வோசைக்கடல்
போலருள் செய்திடு பூரணியாள்
மாசற்றிடு தேசத்தியல் வாசந்தரு வீசத்தரு
வாய்த்த வளம்பல கேளுங்கடி. (உரு)

காவின் முகிற்குல மேவிடு மாஞ்சிகி
கண்டு களிப்புடன் றூவிடுமாம்
பூவி லிருந்துதேன் பொங்கு மேயந்தப்
பூப்பணை பச்சாலி யிற்றங்குமே. (உசு)

கோகிலங் கள்சுதி கூடிடு மாமயில்
கும்புகும் பாய்நட மாடிடுமாம்
பாகிய லாய்க்கிளி பேசிடு மேமதிப்
பாங்கின்மும் மாரிகள் வீசிடுமே. (உஎ)

கன்னல் கமுகெனத் தோன்றிடு மேகயல்
கமுகின் பாளையைக் கீன்றிடுமே
மின்னு மழையுட னேயிறங் கும்பணி
மேவிக் கருடன்மீ தேயுறங்கும். (உஅ)

வருமு பள்ளர்க டம்மொலி யும்வய
லேய்ந்து நடுமட வாரொலியுங்
கூறு கடலொலி மன்னிட வேயண்ட
கோளமெங் குந்திடுக் கென்னிடவே. (உகூ)

முடுகு. பருதிக்கதிர் விரிதற்றர நிருதத்தனு விருளற்றிரு
பங்கயம் பூத்துச் சிறந்திடுமோர்
சுருதிச்சமர் பொருதர்க்கெதிர் வருமக்ரம முறுமுக்ரம
சூர்தடிந் தாளூர் வளமுரைப்பாம். (௩0)

வானுல வுங்கொடித் தூபிக ளுமதில்
வாய்த்திடு நல்லவீ ராவிகளும்
மீனென வேமிளிர் கண்ணார் களுபர்
வீட்டினில் வாழ்ந்திடும் பெண்ணார்கள். (௩க)

இந்து சனற்சம யம்பார்ப் பானொளி
யென்று மப்படி யேகாப்பான்
சந்திரன் சாளரங் காட்டுவ தும்பெண்கள்
தங்கள்கண் ணாடியாய் நாட்டுவதும். (௩உ)

ஆடவர் பாற்பெண் மகிழ்வது வுமற்றோ
 ராண்மக னைக்கண் டிகழ்வதுவும்
ஏடவிழ் பூமலர் சூடுவ துமிசை
 யேய்மட வார்பதம் பாடுவதும். (௩௩)

மார னெனவடி வேய்ந்தவ ருமலர்
 மாமகள் போலெழி றேய்ந்தவரும்
வாரணி யுந்தனங் காட்டுவ துமண
 வாளருக் குமபல் பூட்டுவதும். (௩௪)

முடுகு. மேதிக்கமழல் மோதித்தனி சோதித்திரள் வீதிக்கிடு
 மென்பணி நான்கு மறுகினுமே
கோதிப்புகை சாதித்திடு வோதிக்கன மீதிற்கழி
 கொண்டிடு வண்டுகள் பாடிடுமாம். (௩௫)

மங்கைய ரடி வருநீ ரின்மிக
 வாய்த்த கலவை வெறிமீறி
பொங்கி வரும்புன லாறு கவயல்
 போய்ப்புகு மேசெந்நெ னேராக. (௩௬)

ஈச னடியைப் பணிந்திடுவார் சேட
 னென்னவே கல்வி துணிந்திடுவார்
வாசவன் போற்சுகம் பெற்ற வர்பொருள்
 வாய்ப்பில் குபேரனை யொத்திடுவார். (௩௭)

வாழை மடல்களுக் குட்டடை யாஞ்சந்தை
 வகுப்பி லேதின முங்கடையாம்
ஏழைக ளுக்கமு தம்படை யேயென்பா
 ரேற்ற நிலத்திற் பசுக்கிடையே. (௩௮)

ஆடவர் மார்பினிற் சந்தன மேசுக
 மாமனை தோறுமிச் சந்தனமே
பாடமின் னார்குழற் கண்மல ரேசிறப்
 பாய்வினை யாடுவர் கண்மலரே. (௩௯)

மங்கைய ரம்புயம் பொற்பணி யேதவ
மாதவர்க் கன்பர்செய் பொற்பணியே
பொங்கு மலர்த்தடத் தேகன கம்மனைப்
பொக்கிஷத் தேநிறை யுங்கனகம். (சய)

பூம்பொழிற் றேனுணும் வண்டுக ளேமாதர்
பூட்டுவ ரங்கையில் வண்டுகளே
காம்புயர் தோள ருரத்தாரம் வீட்டிற்
கண்ட விருந்தினி துத்தாரம். (சக)

வீதியெங் குந்திருச் சந்தன மேபெண்கள்
மேலில் ரவிக்கையுட் சந்தனமே
சோதி தருங்கோ புரவாயில் அன்பர்
சொல்வர்கண் ணம்மையென் றேவாயில். (சஉ)

போற்றுவ ரங்கொன்றைத் தாமரை யேதடம்
பூத்திருக் குமலர்த் தாமரையே
ஏற்றமின் னார்மொழி யுஞ்சுக மேயக
மெங்கு நிறைந்திடு மஞ்சுகமே. (சங)

பூங்குயி லேத்தரு மன்கொடி யேமலர்
பூத்திருக் கும்பசு மென்கொடியே
ஓங்கு தருக்கள்கள் எம்பயி லும்பொது
வொண்டொடி யார்கட்கள் எம்பயிலும். (சச)

பூந்தரு வார்கண மாவண மேயதிற்
போயுறை வார்களு மாவணமே
மாந்தர்கண் மெய்பினிற் பூசா ரம்விலே
மதிப்புக் கெட்டிடாப் பூசாரம். (சரு)

கச்சிருக் குமட வார்தன மேகடன்
காப்ப தடுத்தோர் களைத்தினமே
குச்சிருக் குங்குழற் சோதியி லேதச்சுக்
கொண்டது கண்ணுளர் சாதியிலே. (சசு)

முடுகு. நாதந்தரு வேதந்தனை மீதன்புட னேதுங்குண
நான்மறை யோர்மறு கோர்புறமாம்
நீதங்கொடு வேதந்தனை யோதுந்திறல் யாதும்பெறு
நீர்மன்னர் வீதிக ளோர்புறமாம். (சஎ)

வஞ்ச ரினந்தனைச் சேரா மன்மிகு
வட்டி யெனுமொழி கூறாமல்
தஞ்சமென் றோர்க்கருள் செய்நாட் டந்தருந்
தன்மை வணிக ரொருகூட்டம். (சஅ)

ஏருழுங் காராளர் வீதிக ளுஞ்சுக
மீந்திடுஞ் சூத்திரச் சாதிகளும்
நேரிகல் கொள்குண நீக்கி யேதினம்
நிற்பர்க ணல்வழி நோக்கியே. (சகூ)

தன்னுயிர் போன்மன் னுயிர்புரப் பார்நானு
சாதியி லுள்ளவ ருஞ்சிறப்பார்
சொன்ன வறத்துறை யைத்துற வார்தவத்
தோர்கள் பணிசெய் தலைமறவார். (ருo)

இன்னும் பலவளந் தாங்கி யேதிசை
யெட்டினி லுமிசை யோங்கியே
மன்னும் பனசையைக் காத்திடு வாள்திரு
வாலைகண் ணம்மைகண் பார்த்திடுவாள். (ருக)

முடுகு. பரிபூரணி சிவகாரணி திருநாரணி புயபாரணி
பண்ணவர் போற்றும் பசுங்கிளியாள்
அரிமீதினி லுறைமாதரி யரிசோதரி வரிவேல்விழி
யம்பிகை தும்பி முகனன்னையாள். (ருஉ)

வாலை யுமைசெக மோகினி யாள்வலி
வாய்த்திடு நற்சிங்க வாகனியாள்
சேலைப் பழித்தநற் கூர்விழி யாள்கண்டு
தேனென வேநிறை பான்மொழியாள். (ருங)

சங்கரி தேவி கவுமா ரிதனைச்
சார்ந்தவர் கட்கருள் செய்வீரி
துங்க நிறைந்த திரிசூ லிபணி
தொண்டர்க் கருண்மிகச் செய்சீலி. (௫௪)

மன்னுங் கொடியினில் வேதா ளியன்பர்
மனத்தி லேயுறை கங்காளி
தன்னடி யார்களுக் கென்றுமுத் திவீடு
தந்திடு ஞான வராகிசத்தி. (௫௫)

மாலினி யம்பிகை யாகிமன் னியிந்த
மண்டல மெங்கு நிறைந்தகன்னி
ஆலி லுறைவிண்டு மூர்த்திதங் கைவான
மம்புவி யெங்கணுங் கீர்த்திமங்கை. (௫௬)

முடுகு. திருமார்பினின் முருகார்தொடை மருவார்புய வறுமாமுக
சேவற்கொ டியுயர் சேயுடனே
பொருமேருவி னருகாகவே யருமாமறை தருமாமுகப்
புண்ணிய னைமக வாய்ப்பயின்றாள். (௫௭)

தொண்ட ரகந்தனி லேகுடி யாள்பொலி
தோற்றிய தோரிலுப் பைக்குடியாள்
தண்டருந் தாமரை மெல்லடி யாள்செறி
சாலி வளர்ந்தசெந் நெற்குடியாள். (௫௮)

நாவலர் மேலருள் செய்யுளத் தாள்நெல்லை
நல்கிய தோர்பிரண் டைக்குளத்தாள்
மாவனத் தார்ந்த தெனுங்களத் தாள்நில
மல்கி நிறைந்தசா னுங்குளத்தாள். (௫௯)

வஞ்சரைப் பாய்மழுக் காந்தலி னுள்வளம்
வாய்த்தநல் லான்செட்டி யேந்தலினுள்
கொஞ்சு மொழிவெல்லக் கட்டியி னுள்தனங்
கூடிய நன்மின்னஞ் செட்டியினுள். (௬0)

வேலைப் பழித்திடுங் கூர்விழி யாள்கன
மேன்மைய தாகுமோ ருப்புழியாள்
சோலை நிறைசெங்கை யாங்குளத் தாள்திருச்
சோழநா டைந்தைய னூர்குளத்தாள். (௩௧)

மாசற்ற வேழுருப் பத்தினி னும்நலம்
வாய்த்த வடகலை வேள்வியிலுந்
தேசுல வுநில முட்கிடை யாள்குலச்
செய்ய வருந்தரு நன்னடையாள். (௩௨)

மாமதி வைகாசித் தேருடை யாளாடி
மாத முளைக்கொட்டுச் சீருடையாள்
பூமனுங் கோல்மதிக் கோலாட் டந்தையிற்
பூசமெண் ணெய்க்காப்பு நாட்கூட்டம். (௩௩)

அங்கயற் கண்ணி யெனக்கூ றியரு
ளாருங்கண் ணம்மை யெனத்தெரி
சிங்கார மாக்கும்மி தானடித் தானிதந்
தேவி பெரும்புக ழேபடித்தால். (௩௪)

செல்வ மதிகமா வந்திடு மேமிகச்
சிறப்பு மேன்மேலுந் தந்திடுமே
வல்பிணி யாஞ்சுர மேகிடு மேசயம்
வயிற்று வலியும் போயிடுமே. (௩௫)

முடுகு. சித்தத்தினின் மெத்தத்துயர் பற்றித்தனு சுற்றிக்கொடு
தீவினை செய்யுஞ் சொரிசிரங்கும்
நத்திப்புனல் தத்திப்பெரு வத்திக்கிணை யொத்திப்படி
நாடுஞ் சிலந்தி வகைகளுமே. (௩௬)

ஈழை பிளவையு நீரிழி வும்வயி
றேற்றம் பெருமலைத் தின்கழிவுங்
கூழை யுதிர்தனு நீர்ச்சிறுப் புக்குடை
வாளை கொடுந்துய ராம்வெறுப்பும். (௩௭)

பாண்டு கிரந்தியும் வீக்கமு மேகப்
பற்றும் பவுந்திர நோக்கமும்
நீண்ட தலைவலி வாத மேநிலை
நீங்கி யோடுமே காதமே. (௩௮)

மூலக்கி ராணிகண் குந்த முஞ்செவி
மூட லூமைமுட தொந்தமுஞ்
சால மலடுகன் னத்தோட் டம்வயிறு
தன்னிற் பொருமி வருவாட்டம். (சுசு)

குட்ட முடன் கண்ட மாலைக ளுங்காசக்
கூட்டமு தாம்பெருஞ் சூலைகளும்
வெட்டையுங் குன்மங் கனவலிப் பும்பேதி
மீறிப பீனசத் தின்வலிப்பும். (எ0)

பின்னும் பலபிணி காலோய் வுமிகு
பேதச் சலவை பெருவாய்வும்
மன்னுங் குளிரு கபகோ ழைமிகு
வாதனை செய்திடுங் காதூனே, (எக)

இப்படி நோயுங்கண் ணேய்தீர்ப் பாள்நாம்
என்றுஞ் சிறந்திட வேகாப்பாள்
செப்ப முடன்கும்மி செப்பும்பெண் காணிங்கள்
சீர்பெற வாழியைச் சொல்லுங்கடி. (எஉ)

பூவைகண் ணம்பிகை தான்வாழி கங்கை
பூண்ட சோமீசர்வாழி
பாவை யெனுஞ்சிவ காமியு மேயருட்
பண்ணவர் சித்தர்க ளும்வாழி. (எ௩)

அஞ்சன மேனி திகழ்வெங்க டாசல
மாகும் பெருமாளுந் தான்வாழி
வஞ்சமில் லேமு நகரென வேநிதி
வாழும் வணிகரெ லாம்வாழி. (எச)

வேதியர் வாழி தமிழ்வாழி யென்று
மேவிய நாடு நகர்வாழி
ஓதிய பாவலர் தான்வாழி கும்மி
யுவந்துரைப் போர்களும் வாழியவே. (எரு)

முற்றிற்று.

உ

கணபதி துணை.

திருப்பனைச்

சோழீசர் மாலை.

காப்பு.

கட்டளைக்கலித்துறை.

மாதிக்கு மேத்தூநற் றென்பன சைப்பதி வாழுமையோர்
பாதிக் குயராருட் சோழீச ரென்று பகருமுக்கட்
சோதிக்கு வந்தவொண் பாமாலை கூறமெய்த் தூயவருள்
ஆதிக் குணக்குஞ் சாத்தாள் மலரென் னகம்வருமே.

நூல்.

நீரார் சடைதனி லாரா நறவ நிறைந்தகொன்றைத்
தாரா மலைமகள் சீரா சதுர்மறை சாற்றனந்தம்
பேராத வாதமெய்த் தீரா கனிந்துனைப் பேசவரந்
தாரா யினிதருள் கூராய்சோ ழீச்சுரத் தற்பரனே. (க)

ஐயா மறிமழுக் கையா வடிய ரகத்திலுறை
துய்யாவெண் ணீறணி மெய்யாவன் றொண்டர்தம் தூயசந்தா
மையார் விழிப்பர வையாரிற் சென்னின் மலரடியைக்
கையா தெனதுளம் வையாய்சோ ழீச்சுரக் கண்ணுதலே. (உ)

காவா சனத்தனப் பூவா சனத்தனங் கைகுவிக்குந்
தேவாவெக் காலமு மூவா தொளிருந் திகம்பரனே
கூவாகை யானினை நாவாற் சொலாவெனைக் கூற்றுறுங்காற்
பூவாரு நின்கழ லீவாய்சோ ழீச்சுரப் புண்ணியனே. (௩)

கண்டே மொழிவிழி வண்டே மலர்க்குழல் கார்பவளத்
துண்டே யிதழ்முலை செண்டே யெனமய ரேய்ந்துநிதம்
வண்டேய் கரத்தியர் தொண்டே புரிந்துமெய் வாடுமெனைப்
பண்டேய் வினையறக் கண்டாள்சோ ழீச்சுரப் பண்ணவனே. (௪)

வேதா முகுந்தர்க்கு நாதாவொண் வேணியின் மீதிலணி
தாதா ரிதழியம் போதா வுரைப்பரி தானமறை
மீதாரு நின்புக ழோதாக் கடையெற்குன் மெய்யருளார்
பாதாம் புயந்தொழத் தாதாசோ ழீசப் பரஞ்சுடரே. (ரு)

கண்ணா யிரத்தனும் விண்ணோரு மேத்தக் கடல்விடத்தை
யெண்ணா தருந்திய வண்ணா விகத்தெளி யேன்பவத்தி
னண்ணா தருளுமுக் கண்ணா திகழ்வெண் ணகைத்துவர்வாய்ப்
பெண்ணா ளுமையிடக் கண்ணாசோ ழீச்சுரப் பிஞ்ஞகனே. (சு)

வானே யமரர்தங் கோனே யடியவர் வாழ்த்துறுசொற்
றேனே யருமருந் தானே யரியயன் றேடவரி
யோனே யுமைமகிழ் வானே நினைத்துதித் தோதவரந்
தானே யருண்மகத் தானேசோ ழீச்சுரச் சங்கரனே. (எ)

அலையாறு சூடைந் தலையா மகத்தெழு மத்தியுரிக்
கலையா கயிலை மலையா வுலகவாழ்க் கையதனை
நிலையா மெனமதித் துலையார் மெழுகென நின்றவெனை
யலையா தருள்பொற் சிலையாசோ ழீச்சுர வற்புதனே. (அ)

தூயா மறையொலி வாயா நிறைந்தநின் றொல்சரிதை
யாயா தவர்பெரும் பேயா யலைந்து மனைவயிற்றில்
ஓயா துதித்தவர் நாயா யுழலுவ துண்மையன்றோ
தாயா யுவந்தரு ளேயாசோ ழீசத் தனிமுதலே. (கூ)

விடையா மதியஞ் சடையா வலிவரி வேங்கையின்றோ
லுடையா பனக விடையாவொன் றுருபி ருண்ணுமழுப்
படையா விதழித் தொடையா பணிபுரி வேற்கருளத்
தடையாதென் றூல முடையாசோ ழீசத் தயாபரனே. (க0)

அன்னத் துறைபயன் வன்னத்த னும்பிக வன்புறவே
யென்னத்த னென்றுளத் துன்னிப் பணிபகல் லின்பளித்தாய்
மன்னத் தரையினின் றன்னைத் துதிக்க வகையறியா
வென்னைத் திருத்தருண் மன்னற் புதச்சோ ழீச்சுரனே. (கக)

கங்கா தராவுமை பங்காநின் பாதங் கருதடியார்
மங்கா தருள்புரி துங்கா மவுலி மதிமுடித்த
சங்கா கடையெற் கிரங்காய் பவளத் தனுவுடைய
வங்கா பனசை யரங்காசோ ழீச வருட்கடலே. (௧௨)

அத்தா வறுகணி பித்தா வமலை தனக்கமைந்த
சுத்தாமுன் வேயி லுதித்தா யெனநிற் றுதிப்பவர்க்கு
முத்தார் கனத்த தனத்தார் மயலற முத்திதருங்
கத்தா வெனக்கரு ளைத்தாசோ ழீசமுக் கட்பரனே. (௧௩)

ஏகா வடநிழல் யோகா கடலி னெழுந்தநஞ்சை
யாகார மாக்கொளும் வாகா திரிபுர மன்றெரித்த
யூகா தனுப்பொன்னி னுகா விமய முதவுகன்னி
பாகா வெனைத்தினங் காகாசோ ழீச்சுரப் பண்ணவனே. (௧௪)

கல்லார்க ணன்னெறி செல்லார்க ளுன்னைக் கருதிநிதஞ்
சொல்லார்க ளேபெரும் பொல்லார்க ளென்றுமித் தொல்புவியில்
எல்லாரும் பேசுத னல்லா வறிந்துனை யேத்தமதி
யில்லா வெனக்கெதிர் நில்லாய் பனசைச்சோ ழீச்சுரனே. (௧௫)

நீதா பெருப்புவித் தாதா நினதடி யேத்துமென்மேல்
வாதா வுகந்தரு டாதா மலர்ந்தவன் சித்தமிரங்
காதாபொன் னுடகன் வேதாவுந் தேடியுங் காண்பரிய
நாதா பணித்தடம் போதாசோ ழீச்சுர நாயகனே. (௧௬)

தெள்ளா ரடியர்நெஞ் சுள்ளாயுன் னுமந் தினந்தினமும்
விள்ளாக் கசடனென் றெள்ளாதென் மீது வெகுளிசற்றுங்
கொள்ளா தரந்தைபிற் றள்ளாது நன்மை கொடுத்தருள்வாய்
வெள்ளா றுறைந்திடும் வள்ளாய்சோ ழீச்சுர வித்தகனே. (௧௭)

கண்ணாக் கனல்ரவி தண்ணார் மதியினைக் கண்டுமதி
லெண்ணார் புரம்பொடி யண்ணாவென் றேபுனை யேத்திநின்றேன்
விண்ணாரு மாலையின் வண்ணாவென் வல்வினை வேரறுத்தாள்
எண்ணான் கறம்புரி பெண்ணா ளிடங்கொள்சோ ழீச்சுரனே. (௧௮)

திருமாது கேள்வர்முற் கண்டர வேயெழில் சேர்திகிரி
தருமாதுங் கக்குண தற்பர னேதவ ரால்விடுத்த
வருமா துணிந்துரித் ததனதள் போற்றியென் பாலுனருள்
வருமா துயரிங் கறுமாசோ ழீச்சுர வானவனே. (கசு)

கருங்குவ ளைக்கண் ணகத்தனங் கோவைக் கனியிதழ்நூன்
மருங்குவ ளைக்கன மின்னார் மயக்கினில் வாடுகின்றேன்
சுருங்குவ ளைக்கட னஞ்சமுண் டோய்நிற் றுதியடியார்
நெருங்குவ ளைக்கடுக் கண்டசோ ழீச்சுர நின்மலனே. (உ0)

கலையத்தத் தாமுடி கங்கைவைத் தோயெழிற் காசினியின்
முலையத்தத் தால்விலை செய்மாதர் மேன்மிகு மோகம்வைத்தே
யலையத்தத் தானுழல் வேனையிங் காளெனக் கார்துணைவே
றிலையத்தத் தாமரைத் தாளீ பனசைச்சோ ழீச்சுரனே. (உக)

தருக்கோவை வானவர் விண்டுவுங் கஞ்சனுந் தானறியோய்
திருக்கோவை வாசகஞ் சொல்வாத வூரர்க்குச் சீரருள்செய்
தருக்கோவை வாயுமை பங்காமெய் யாயுனை நம்பிடுமென்
பருக்கோவை யந்தவிர்த் தாளுஞ்சோ ழீசப் பரஞ்சுடரே. (உஉ)

தனவிலை மாதர் தமையே நினைந்தித் தரணிதனில்
நனவிலை யேநிதம் வாடுகின் றேனுன்ற னாமமதைக்
கனவிலை யானினை யாவெனை யாளக் கயிலைமலை
மனவிலை யானனத் தேவாசோ ழீச்சுர வானவனே. (உங)

வஞ்ச மனத்தவ னாகியுன் னன்பர்முன் வந்துநின்ற
வெஞ்ச மனத்தடத் தாலே யுரங்கெட வீட்டியவா
கஞ்ச மனத்தவ னாடரி யாய்க்கடை யேனவல
நெஞ்ச மனத்த வருடாசோ ழீச்சுர நின்மலனே. (உச)

அம்பரங் கால்புனன் மண்டீ மதியென் றயன்மகவான்
பம்பரங் காவி தனங்கண் டிருநெஞ்சன் பாரண்டமே
கம்பரங் காட்டியு மாவாய லாய்க்கடை யேற்குதவ
நம்பரங் காலாந் தகனேசோ ழீச நுதற்கணனே. (உரு)

ஒருமத மாவி னுரிபோர்த்து வாரியி லோங்குரகந்
தருமத மாங்கடு வுண்டோய் வளைக்கையன் றன்மகவாய்
வருமத னூற்புரி காமா விகாரத்தில் வாடுமெனைத்
தரும தயாநிதி வந்தாள்சோ ழீச்சுரத் தற்பரனே. (உகூ)

சூதங்க மாகத் துலங்குந் திருத்தனஞ் சூனிறக்கார்
மாதங்கம் பாதி யுடையாய் திரிபுர மாய்ப்பதற்கு
நீதங்க மாங்குன்றை நற்சிலை யாக்கியுன் னீர்வனசப்
பாதங் கருத்திற் பதித்தாள்சோ ழீசப் பரம்பொருளே. (உஎ)

மாகன கக்கிரி யைத்தனு வாக்கியம் வாரிதிநே
ராகன சங்களி கூறவு மாழி யளித்தெழில்வாய்
நீகன கஞ்செனி வைத்துநின் றேயின்று நின்னருட்டா
கோகன கன்சிரங் கையார்சோ ழீசக் குணக்கடலே. (உஅ)

வேலா யுதன்றனக் கேயத்த னேமுனம் வெஞ்சமனைக்
காலா யுதமெனக் கொண்டன்று வீட்டிய கண்ணுதலே
மேலா யுதம்மடி யார்க்கரு ளுயக மேவுமென்பான்
மாலா யுதவு பனசைச்சோ ழீச்சுர வானவனே. (உகூ)

மாகா மனைக்சணி னுனீ றெனச்செய்த மான்மறிக்கை
ஏகா மனும்பருக் காய்க்கடு வுட்கொண் டிசைமிகுந்த
வாகா மருட்சமன் வந்தடி யேனை வருத்துதற்கா
ளாகாம னல்வரந் தந்தாள்சோ ழீச்சுர வற்புதனே. (௩0)

பெருமாதங் கத்தி னெதிர் தோன்றி யாளரி பின்னையெனும்
உருமாதங் கத்துற நீர்வேணி சூடிமுன் னும்பருக்கா
வருமாதங் கக்கிரி வில்லாக்கி யுன்ற னருளெனக்கு
வருமாதங் கத்தல மீவாய்சோ ழீச்சுர வானவனே. (௩க)

திருப்பனசைச் சோழீசர் மாலை

முற்றிற்று.

உ

கணபதி துணை.

திருப்பனசைச்

சோழீசர் பதிகம்.

காப்பு—வெண்பா.

ஆழிசூரந் தேறுகடு வம்மிடற்றி லேயடைத்த
சோழீ சுரர்பதிகஞ் சொல்லவே—பாழிமதம்
அஞ்சுகரத் தந்திநிறத் தாதியும ணுதியுமாங்
குஞ்சரமென் றுந்துணையா கும்.

ஆசிரிய விருத்தம்.

சங்கரா சம்புசிவ சர்வபரி பூரணா
சண்டனை யுதைத்த பாதா
தற்பர சதானந்த சகளநிட் களவிமல
தபனனரி யிந்து கண்ணா

சங்கநிறை யிறைவனே யெங்குமுறை குரவனே
தானான சர்வேஸ் வரா
சடையனே விடையூர்தி சுடலைதனி லாடிய
தனிப்பரம நாத சோதி

துங்கமறை யானவா மாரனை யெரித்துத்
துலங்கட்ட மூர்த்தி யாகித்
தூநீ றணிந்திடு திகம்பர புராரியே
சொல்லரிய மலைவில்லி யே

கங்காத ராவெனைக் காத்திரட் சிக்கநற்
கருணையின் றருள்புரிகு வாய்
கமலமிசை தவழ்வளைக ணிறைபனசை யதனினுறை
கடவுள்சோ ழீச பரனே. (க)

அம்புலியு டன்கொக்கி ருக்கறுகு கொன்றைகூ
விளமென மாம ருப்பு
மக்குமணி யுங்கங்கை மிக்கதிரு வேணிமிசை
யாவலுட னேத ரித்தும்
வெம்புகரி மேலுரி யுடுத்தாக மானபணி
விரைவாக வேய ணிந்தும்
வெங்கையையு ரித்துமழு மானிணையி சைத்துமா
விண்டுவுக் சாழி யீந்துங்
கும்பனுட னேநின்ற முப்புரந் தனைமுனங்
குறுநகையி னலெ ரித்துக்
கோலமுறு நாரியொரு பாகமதி னிற்கொண்டு
கோகனக முற்ற பிரமன்
சம்பதும மாமலர்க் கைமீதி லேந்தியே
கருணைவைத் தெனையாளு வாய்
கமலமிசை தவழ்வளைக ணிறைபனசை யதனிலுறை
கடவுள்சோ ழீச பரனே. (௨)

திருமருவு கணிகையர் குலத்துவரு பரவையார்
செய்யகடை வாயில் தனிலும்
திகழ்சதத் தலையனுர மாறவே நாயகச்
செவ்வுகிரி னால டர்த்தும்
அருமறைச் சிரமீது நின்றுமரி கேழலா
யறியவரி தாயி ருந்து
மந்தணர் குலச்சிறுவ னின்றழைக் கக்கால
னங்கமதி லேய டர்த்தும்
பெருமைதரு மாயிரத் தெட்டென்று பேசும்
பெரும்பதிக டோறு நின்றும்
பித்தனென் றேசுவன் றொண்டருக் கருளவே
பெரியவய தாய்ந டந்துங்
கருதுமடி யாரிதய கமலத்து மென்மனக்
கல்லினு மிருந்த பாதா
கமலமிசை தவழ்வளைக ணிறைபனசை யதனிலுறை
கடவுள்சோ ழீச பரனே. (௩)

எச்சிலை யுமிழ்ந்துகாற் றேற்செருப் பால்விழி
யிசைந்திட வுதைத்த வர்க்கு
மெண்ணிலாக் கற்கொண் டெறிந்தெறிந் தேதின
மேசியே நின்ற வர்க்குங்
கைச்சிலையி னூற்றமும் பேறவே தலையிற்
கடிந்தேத கர்த்த வர்க்குங்
கனவெகுளி கொண்டுகர வேத்திரத் தாலுடல்
கன்றிட வடித்த வர்க்கும்
பட்சமிக வைத்தருள் புரிந்ததே யல்லாது
பத்தியுட னித்த நித்தம்
பசியவிலை மலர்தூவி யின்பணி புரிந்தவர்கள்
பால்விரைந் தருள்கி லாதென்
கச்சணி தனத்தியென தன்னைசிவ காமியிரு
கண்களிக் கின்ற வழகா
கமலமிசை தவழ்வளைக ணிறைபனசை யதனிலுறை
கடவுள்சோ ழீச பரனே. (௪)

அல்லெலன நிறைந்தவன் னஞ்ஞானம் விடியுமா
வாரகம் பாவ வின
மகலுமா துவிதமற் றொழியுமா நித்த மூ
மடங்காத மோக மற்பேய்
நில்லாம லோடுமா வானந்த வாவேச
நீர்மையறி வென்னை விட்டு
நீங்காது நிற்குமா பெண்ணாசை பிரியுமா
வென்றென்று நெஞ்சி லுன்னிப்
பொல்லாத பூவுலகி லெண்ணிமன முருகியே
புண்ணாகி நிற்ப தல்லாற்
புந்திதெளி வாகியுன தந்தம தறிந்திடப்
புகலிடம் பிறிது காணேன்
கல்லாலி ருந்தடியர் நால்வருக் கருள்செய்த
கருணைவைத் தெனையாளு வாய்
கமலமிசை தவழ்வளைக ணிறைபனசை யதனிலுறை
கடவுள்சோ ழீச பரனே. (௫)

கூசாது வாசால கம்பேசி வேற்றுழிற்
கொள்ளுமிரு விழிகள் காட்டிக்
கோலமுட னேலமிடு வண்டணிந் தபிநயக்
கோடரு காங்கள் காட்டி
வாசந் தருங்களப மேபூசி யேதன
வனப்பினிற் சிறிது காட்டி
வாரிச மெனப்பொலியும் வதனமுங் குறுநகை
வகுப்பென முருந்து காட்டி
நேசம்வைத் தவர்போல வேதழுவி மோசமே
நெஞ்சினிற் கொண்டு வஞ்ச
நீர்மைபுரி மங்கையர்க ளாசையா லுருகாது
நின்கழலே யேது திக்கக்
காசணி புயத்திசிவ காமியுறை வாமனே
கடையனேற் கருள்புரிகு வாய்
கமலமிசை தவழ்வளைக ணிறைபனசை யதனிலுறை
கடவுள்சோ ழீச பரனே. (௬)

ஆர்மா னிடப்பிறவி வந்தென்ன நானெனு
மகந்தைசற் றேய வில்லை
யாசைமிடி போகவிலை கோசமயல் தீரவிலை
யாணவ மொடுங்க வில்லை
கூரயிலின் விழிமாதர் காதல்விட் டகலவிலை
கூவாசை தனவாசை யுங்
கொஞ்சமெனு மாறவிலை வஞ்சகுற வோடவிலை
கொச்சைக் குழாநட் பினைப்
பாரதனி லேசத மென்றெண்ணி யுண்மைதெரி
பத்திவழி தனையறிகி லேன்
பதுமா சனன்விதிப் படியுமிது வோவலது
பண்டுசெய் திடுகரும மோ
காருறையு மனமல மகலவே யின்றுனது
கருணைவைத் தருள்புரிகு வாய்
கமலமிசை தவழ்வளைக ணிறைபனசை யதனிலுறை
கடவுள்சோ ழீச பரனே. (எ)

அரிதிரையி னிற்பட் டலைந்திடு துரும்பதா
யற்பகலு நித்த நித்த
மாசைமய லாகிவரு பாசமத னிற்சிக்கி
யரிகிகர தான மனது
எரிமெழுக தெனவுழல்வ தல்லாது சற்சங்கை
யெள்ளளவெ னுஞ்செ விக்கு
ஏறவிலை துர்ச்சங்கை தீரவிலை யேயிதற்
கென்செய்கு வேனைய னே
அருமறைக் கரியனே யன்புவைத் துன்கருணை
யாகிநிறை கின்ற முகிலால்
ஆலியது குத்திடுவ தோத்தவுன தருளினு
லடியனெனை யாளு தற்குக்
கரியுரி யணிந்துதலை கொண்டுபலி யுற்றநீ
காட்சிதர வின்று வருவாய்
கமலமிசை தவழ்வளைக ணிறைபனசை யதனிலுறை
கடவுள்சோ ழீச பரனே. (அ)

அன்னமய கோசமைம் பூதத்தி னுலேசெய்
தாடும் புழுக்கூட்டி ஞ
லைமமதை போருமை வன்மொழி வழங்கிடுத
லாசைக் கொடி தான வெகுளி
நன்னயமி லாதகொலை பொய்களவு கட்காம
நானெனு மந்தை கொண்டு
நாடோறு மலைவதென நீதியோ சோதியே
நாயினுங் கடைய னுள்ளச்
சின்னமதி யாவையு மகற்றவிடை மீதேறிச்
சிதமதி வதனி யான
செவ்விமா கதவல்லி நவ்வியிரு நயனிசிவ
சத்திதிரி சூலி வாலை
கன்னிசிவ காமியுடன் வந்தெனெதிர் தோன்றியே
கருணைவைத் தெனையாளு வாய்
கமலமிசை தவழ்வளைக ணிறைபனசை யதனிலுறை
கடவுள்சோ ழீச பரனே. (௯)

மாருதத் தோடுமப் பங்கியா காசமுடன்
　　மண்ணினு லான வுருவில்
வந்துகுடி யாநின்ற தத்வக்கு ழாத்தினது
　　வகையதனை யாய்ந்து மெய்மைச்

சீரதனை யறியாது நானெனு மகந்தையாற்
　　சிற்சுக வபேச்சை யில்லாச்
சிறியனெனை யெந்நாளு நின்கருணை யாகிச்
　　சிறந்திருக் கின்ற பெரிய

வாரிதியில் வாய்மடுத் துண்ணும் படிக்குதவி
　　வஞ்சகத் தொழில்கள் புரியும்
வன்மனக் கல்லைக் கரைப்பதற் கின்றுநீ
　　வந்தருள் புரிந்திடுவை யே

கார்மருவு மேனிசிவ காமியுறை வாமனே
　　கருணைப்ர வாக நிதியே
கமலமிசை தவழ்வளைக ணிறைபனசை யதனிலுறை
　　கடவுள்சோ ழீச பரனே.　　(௰)

முற்றிற்று.

ஸ்ரீமதே ராமனுஜாய நம:

திருப்பனசைப் பெருமாள்
வேங்கடாசல மாலை.

காப்பு.

வெண்பா.

திட்டிதிதி சம்மாரஞ் செய்விளையாட் டாப்புரிந்தும்
எட்டெழுத்தா வண்டமெல் லாமான—விட்டுணுவாந்
தென்பனசை வேங்கடமாற் செய்யபா மாலைசெப்ப
மன்குருகை யார்துணையா வார்.

நூல்.

கட்டளைக்கலித்துறை.

செய்யா ளுறையகச் செய்யா வெழிலி யெனச்சிறந்த
மெய்யா வடியவர் மெய்யா விளங்குவெண் வாரணச்செங்
கையாவென் பாலருள் கையா துதவுநற் கஞ்சவிழி
யையா பனசைப் பதிவேங்க டாசல வச்சுதனே. (க)

கல்லார்க் கரிதுவன் கல்லா ரதர்ப்பெருங் கானடந்தும்
எல்லாரும் வான்புவி யெல்லா மளந்தது மெண்சதப்பேர்
வில்லார் பதியள வில்லாது மேவியென் மெய்யகநாச்
சொல்லாய் நிறைதுணைத் தாள்வேங்க டாசலச் சுந்தரனே. (உ)

நாதாநின் மேற்றுதி நாதா நளின மெனத்துலங்கு
பாதாவுன் பாற்புகற் பாதா வெனக்கருட் பார்வைசெய்ய
வாதாவெக் காலுந்த வாதா பனசைப் பதியில் வளர்
நீதா திருவேங்க டாசல மாதவ நின்மலனே. (ங)

சீராப் பதிதுயில் சீராகா யாவெனச் செப்புமுடற்
கீராதா சர்க்குப காரா வடியர் கருத்தின்மன்னும்
பேராநல் லாயிரம் பேரா வெனக்கருள் பேணுவனத்
தீரா பனசைப் பதிமே வியவேங்க டாசலனே. (ச)

குன்று நிறைக்குலங் குன்றுது காத்து விளாக்கொள்கனி
கன்று லெறிந்துகைக் கன்றுது கண்ட ததியினுக்கா
வென்று யசுரரை வென்று யமலை புவிமினெடு
நின்று யெனக்கருள் செய்வேங்க டாசல நித்தியனே. (௫)

வந்தானுன் சேயென வந்தான் புரிசம ராலென்னகம்
நந்தா தருள்புரி நந்தா வமளிநற் சீரநிறை
சிந்தாநின் சிந்தை கசிந்தானை வேந்தர்கள் செப்புசெப்பார்
சந்தா பனசைப் பதிவேங்க டாசலச் சற்குணனே. (௬)

தூதாமன் னைவர்க டூதா விரத்னந் துலங்குகுழைக்
காதா மதிக்கடங் காதா கலைப்பெண் ணெனத்தருந்தாட்
போதா விரங்கியிப் போதாவ தாளெனைப் பூவினுக்கு
மாதா வெனவளர் மால்வேங்க டாசல மாதவனே. (௭)

தீயார்க் கருளுகந் தீயா முராரி திருக்கமல
வாயா வெனக்கருள் வாயா வடிய ரெதிரில்வரு
நேயா வுகந்துமுன் னேயாயர் பாடியி னின்றுவளர்
தூயா பனசைப் பதிவேங்க டாசலச் சோதியனே. (அ)

முன்னுக மேனடி முன்னு வகத்தின் முளரியுறை
பொன்னு மலைகொடு பொன்னுக் குலத்தைப் புரந்துநின்ற
மன்னு நினைத்துதி மன்னு வெனக்கருள் வாய்புரிசை
மின்னுர் பனசைப் பதிவேங்க டாசல விண்ணவனே. (௯)

பூமா வெனதனைப் பூமா பொருந்தப் புனைதுளவத்
தாமா வரிபரந் தாமா மறையறை யுஞ்சகத்ர
நாமா நிதமக நாமா தவாவென நாடவாரந்
தாமா பனசைப் பதிவேங் கடநற் றயாநிதியே. (௧௦)

கண்ணு மறைத்தலைக் கண்ணு கதிரொளி தங்குபுவி
விண்ணு நினைத்தினம் விண்ணு வெனக்கருண் மேகநிற
வண்ணு கதிதரு வண்ணுய காபன சைப்பதிவாழ்
அண்ணு திருவேங்க டாசல மாலெனு மற்புதனே. (௧௧)

நத்தானை யன்பி லவரைநத் தானை நவிலுசன்மம்
பத்தானை மாதுசம் பத்தானை மோட்சப் பதியினுக்கு
வித்தானைக் கீதைசொல் வித்தானைக் கந்த மிகுந்துளவக்
கொத்தானைத் தாலப் பதிவேங் கடவனைக் கூறுவனே. (கஉ)

தொடையா னரம்பை நிகர்தொடை யான்றொண்டர்க் கென்றுந்துன்
படையான் கரத்தினில் வாட்படை யான்பவப் பௌவமென்னை [பம்
யடையா னமளி வடத்தடை யானடி யாரகத்தில்
உடையான் பனசைப் பதிவேங்க டாசல வுண்மையனே. (கங)

மதியான பத்தர் தமைமதி யான்கயம் வாவெனமுன்
கதியான் நடந்துத வுங்கதி யான்பொய்க் கசடர்முன்வந்
துதியா னடியர் கனைத்துதி யானெனைத் தொல்பவத்திற்
பதியான் பனசைப் பதிவேங்க டாசலப் பண்ணவனே. (கச)

கரியா னுடல மெலாங்கரி யான்கரு தார்கடுன்பம்
அரியான் கரத்தினி லேயரி யானலர்ப் பொன்னைவிட்டுப்
பிரியான சுத்தர்க ளப்பிரி யான்பிறப் பெற்ககற்ற
வுரியான் பனசையில் வாழ்வேங்க டாசல வுத்தமனே. (கரு)

வீட்டா னெனைப்பவம் வீட்டான் விசையன் விசைப்பரித்தேர்
மீட்டா னிபத்துயிர் மீட்டா னிழிதொழில் வீணர்க்கின்பங்
காட்டான் மதுவனக் காட்டா னெனக்குக் கதிதருநன்
னாட்டான் பனசைப் பதிவேங்க டாசல நாரணனே. (கசா)

தலையானை யென்னைப் பவத்தலை யானைச் சமருக்கஞ்சி
மலையானை வேங்கட மாமலை யானை வழுத்துமெண்ணெண்
கலையானை யன்பர் கனைங்கலை யானைக் கரத்தினிற்செஞ்
சிலையானைத் தாலப் பதிவேங் கடவனைச் சிந்திப்பனே. (கஎ)

தரத்தா னெழினிறை யந்தரத் தான்பகை யைத்தகர்க்குஞ்
சரத்தா னசர சரத்தான் றரணி தனைமறைசக்
கரத்தா னிருசது ரக்கரத் தானெனைக் காக்குமஞ்சார்
புரத்தான் பனசைப் பதிவேங்க டாசலப் புண்ணியனே. (கஅ)

மாவானைக் கற்கொடு மாவானைக் காத்த வனைவலிகொள்
ஏவானைக் கூற்றையெற் கேவானை வேதா மிலங்குபண்ணூர்
நாவானைத் தாசர்முன் னுவானை யின்ப நலமிகுபண்
பாவானைத் தாலப் பதிவேங் கடவனைப் பற்றுவனே. (௧௯)

கோலா கரத்தெரிக் கோலாநற் கோசலை கொஞ்சுமின்பப்
பாலா புவியிலென் பாலா தரம்புரி பண்டுபண்டி
சாலா லுதைத்தொளி சாலா தவனெனக் காட்டுமெய்யின்
சீலா வெனக்கருள் பால்வேங்க டாசலச் செங்கணனே. (௨௦)

கத்தா வடியர கத்தா தவத்திற் களங்கமிலார்
சித்தா தனுமு னெசித்தாய் புவிதனி லேசெனனம்
பத்தா வருதுள பத்தா வுனதுகண் பார்த்தெனையாள்
நித்தா பனசைப் பதிவேங்க டாசல நின்மலனே. (௨௧)

வீசலை மீதிற் றுயிலரங் காவெண் ணைகைத்துவர்வாய்க்
கோசலை பெற்ற குமாரா வடியனிக் கூவினிலே
காசலை மாலை தனத்தார் புரியு மயற்கலக்க
மாசலை நீக்கியின் ருள்வேங்க டாசல மாயவனே. (௨௨)

சீராம ராம னெழில்வத னுசிறி யேனையுற்ற
தீரா மனக்கவ லைப்பிணி மாற்றநின் சேவடிதா
பேராமன் னுயிர நாமா புயம்பிரி யாத்துளவத்
தாரா மனபன சைப்பதி வாழ்வேங்க டாசலனே. (௨௩)

மாதா வுதரந் தனிற்பிறந் தேவருந் தாமெனக்கு
நீதாவுதரந் திருவேங் கடமலை நின்றமெய்யா
பூதா வுதர வுரநா ரணபொன் னிலங்கையெய்த
நாதா வுததி துயில்வேங்க டாசல நாயகனே. (௨௪)

வானர சிந்திரன் வேதா தவமுனி வோர்வணங்க
மானர சிங்க மெனத்தோன் றித் தூணடு வந்துதித்த
கோனர சின்கண் விருப்பற் றடவியிற் சென்றகொண்டல்
வானர சியனு மற்கருள் வேங்கட மாலவனே. (௨௫)

மாதா விருந்த மலர்ப்பொழிற் சூழலில் வல்லரக்கன்
ஓதா விருந்திற் றவவடி வேந்தி யுழல்வினையால்
தீதா விருத்தம் புரிந்தோ னுயிர்செகுத் தோயெனையாள்
நீதா விருந்தை யணிவேங்க டாசல நின்மலனே. (௨௬)

நாரணன் கேசவன் மாதவன் மாயவன் நாமெனச்சொல்
ஆரணந் தேடற் கரியவ னாதி யெனவழைத்த
வாரணங் காக்கமுன் னோடிவந் தோனென்றன் வன்மனம்வாழ்
காரணன் மூலப் பதிவேங்க டாசலக் கார்வணனே. (௨௭)

மாவனந் தாரக் குலமீன்று சாலின் வழியுலவப்
பூவனந்தாவுந் தடஞ்சூழ் பனசை தனைப்புரக்குந்
தேவனந் தாமுகுந் தாநீ யெனக்கருள் செய்திடுவாய்
காவனந் தாவேங்க டாசல மாதவக் காகுத்தனே. (௨௮)

வேத சாத முடையாய் கமல மெனவிளங்கு
பாத சரவச ரந்தரு வானைப் பரிந்தளித்த
போதச ரத்துள பாரா ரணுவருள் பூத்தெனையாள்
மாத சரதமன் சேய்வேங்க டாசல மாதவனே. (௨௯)

நாகந் தனிற்றுயின் மாமணி யேதொண்டர் நாடியுன்ன
ஆகந் தனக்கஞ் சனக்குன் றெனக்கொண்டா வாழியையா
மாகந் தனிந்தென்று போதனும் போகியும் வந்துபணி
நாகந் தனஞ்சதி யேற்கருள் வேங்கட நாரணனே. (௩௦)

திருவன மாலிகைத் தோளும்பஞ் சாயுதஞ் சேர்ந்தகையும்
பெருவனப் பார்முகத் தாமரைப் பூக்கணும் பேசுமுகில்
உருவன மேனியுங் கண்டடி யேன்றொழு துய்யவருள்
மருவனஞ் சூழ்பன சைப்பதி வேங்கட மாலவனே. (௩௧)

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருப்பனசை

இராமானுஜ திரிதச வெண்பா.

நம்மாழ்வார் துதி.

வெண்பா.

ஆதி பரமபதத் தையனரு ளாலணைவிட்
டோதரிய பூதூரி லேயுதித்த—நாதனெழில்
மெய்யனிரா மாநுஜவா சாரியன்வெண் பாவிளம்பத்
துய்யசட கோபன் துணை.

நூல்.

பூப்பொழிலு நெல்வளமும் பொன்னிறைவும் பொங்கிமலர்
மாப்பொலியுந் தென்பனசை வாழ்வோங்க—காப்புகந்த
கோனே குணமலையே கோவேரா மாநுஜப்பூ
மானே மகிழ்ந்தெனையாள் வாய். (க)

நீருநில னுந்தலமு நீள்புவியி லேநிறைந்த
சீரார்பூ தூர்மறையோர் செய்தவத்தாற்—பாரதனில்
வந்தவிரா மாநுஜவா சாரியமா வானவவென்
பந்தவினை தீரக்கண் பார். (உ)

ஆசூரி கேசவருக் காதிமைநா ளஞ்சேயாய்
மாசூரு தம்மறையோர் மாமனத்துட்—டேசூறு
ஞானம் பகர்ந்தநல்ல ராமா நுஜமுனியே
யானம்பி னேனின் னடி. (ங)

வையத் தவர்மனத்துள் வல்லிருளுக் கோர்ஞானத்
துய்யகதிர்ச் சூரியனுத் தோற்றியமெய்—யையனே
மாசறுசி ரோங்குமிரா மாநுஜத யாபரமா
வாசமலர்த் தாளெனுள்ளம் வை. (ச)

பொய்யர் மனைசிலையிற் பூவாரின் பூஞ்சமலைத்
துய்யமலர்த் தாளென்முடி சூட்டியாள்—செய்யபசும்
பொன்னே மணியே புனிதவிரா மாநுஜப்பூ
மன்னே மனமது வந்து. (ரு)

நாரணனே நான்மறையு நற்பஞ்ச கிர்த்தியத்துக்
காரணனென் றேயுரைக்குங் காட்சியே—யோரணமாய்க்
கொண்டகொண்ட லேமறையோர் கோவேரா மாநுஜனே
தண்டா மரைப்பதத்தைத் தா. (சா)

பன்னிருவ ராழ்வார்கள் பானுமா சாரியராய்
மன்னியதா சர்க்குவழி வந்ததொண்டா—இந்நிலத்தி
னின்றரா மாநுஜப்பேர் நித்தியனே நின்பதத்தை
என்றுமற வாவரமெற் கீ. (எ)

சாலைக் குளிர்கூபந் தண்மைபெ ரருளாளர்
பானுயக்கும் பத்திமனப் பண்ணவனே—வேலைக்கு
நேராய் நிறைகருணை நீதரா மாநுஜனே
தாராயுன் கஞ்சமலர்த் தாள். (அ)

பொன்பெரிய நம்பியடி போற்றவவர் பூரணமாய்த்
துன்னு ரகசியத்துத் தொன்னூலை—நன்னயமாய்ச்
சாதிக்சப் பெற்றதனிச் சற்குணரா மாநுஜனே
ஆதியனந் தாவனந்தந் தாள். (கூ)

நல்லதிருக் கச்சிநகர் நம்பியரு ளன்னெறியைச்
சொல்லச் சுருதியெனத் தோய்ந்துநின்ற—வல்லவனே
பாஷியத்தைப் பண்ணிவைத்த பண்டிதரா மாநுஜனே
சேஷமுனி யேயுனருள் செய். (க0)

கோட்டியூர் நம்பிமனக் கோளறிய மூவாறு
நாட்டுந் தவணைபுரு நாளவில—மீட்டுமனம்
வாடாமன் மந்திரங்கொண் மன்னவரா மாநுஜனே
தேடா வெனைச்சிறக்கச் செய். (கக)

என்றிருளிப்பெ ரந்தணனும் யாத்திரைக்கே கென்றுவஞ்ச
மொன்றியதை யோர்ந்துணர்ந்த வுத்தமனே—வன்றிறலாய்
வந்தமதப் புன்சமய மாற்றியரா மாநுஜசி
வந்தபதந் தந்தருளு வாய். (கஉ)

வில்லியும்வே டச்சியுமாய் விண்டுதிரு வோடுகச்சி
நல்லிருட்கண் டேயத்த நாயகமே—பல்லுயிரைத்
தன்னுயிர்போ லெண்ணுதயை சாருமிரா மாநுஜனே
யென்னையுமே யாட்கொ ளினி. (கங)

ஆளவந்த மாமுனியை யன்புளவா சாரியராய்க்
கேளுவந்து கிட்டுங் கிளரொளியே—நாளவமாய்ப்
போகாத் தவம்புரிந்த புண்ணியரா மாநுஜனே
வாகா வுவந்துமகிழ் வா. (கச)

சீர்பெரிய நம்பிதிருத் தேவியெண்ணெய்த் தேய்த்தவர்பாற்
பாரிக்கு மூன்றுபிழை பாராட்டி—யூர்றிய
மாசந்நி யாசியென வந்தரா மாநுஜனே
பாசமற வேயருட்கண் பார். (கரு)

மண்டியகூ ரத்தாழ்வான் மாமுதலி யாண்டானுந்
தண்டும் பவித்திரமாய்த் தான்றரித்து—வண்டுளப
மாலையணி மாற்கடிமை வாய்த்தரா மாநுஜனே
வாலறிவு தந்தெனையாள் வாய். (கசு)

கச்சிநகர் மன்சேய் கனபிரம ரட்சுவினால்
அச்சம் புரிந்தா டலையகற்றி—நிச்சயமாய்
நின்ற பரத்துவநி ராமயரா மாநுஜனே
யின்றெனது நோய்தீர்ப்பை யே. (கஎ)

பொய்கையரைப் பூதரைமெய்ப் போதமுறும் பேயாரை
ஐயன் றிருமழிசை யாழ்வாரைக்—கைகுவிக்குஞ்
சொல்லரிய ஞானச் சுடரோரா மாநுஜனே
நல்லறிவு தந்தருண்மன் னு. (கஅ)

வேதந் தனைத்தமிழான் மேதினியி லேவிரித்த
நாதனெனு நம்மாழ்வார் நாண்மலர்ப்பூம்—பாதமதைச்
சென்னிக் கணியெனவே சேர்க்குமிரா மாநுஜனே
தன்னிகரும் பொன்னடியைத் தா. (கக)

கூட்டு மதுரகவிக் கொண்டல்குல சேகரர்தா
ளூட்டு முளநலத்து நாயகமே—பாட்டளிசூழ்
தாரார் தடம்புயத்துத் தண்ணளிரா மாநுஜனே
தாரா யெனக்குனருட் டாள். (உ0)

எத்திசையும் போற்று மெழிற்பெரியாழ் வார்விண்டு
சித்தர்திருத் தாண்மலரைச் சென்னியணி—புத்தமனே
கோனே யமிர்த குணனேரா மாநுஜக்கோ
மானே மகிழ்ந்தெனையாள் வாய். (உக)

வேண்டாதார்க் கெட்டா விமலைவில்லி புத்தூரின்
ஆண்டா ளடிக்கமல மாதரிக்க—வேண்டுதிருக்
கோலமாய் வந்தகுணக் குன்றேரா மாநுஜனே
மாலாய் மகிழ்ந்தென்முன் வா. (உஉ)

தொண்ட ரடிப்பொடியார் தூயதிருப் பாணாழ்வார்
புண்டரிகத் தாள்போற்றும் புண்ணியனே—யெண்டிசையும்
நல்ல வைணவத்தை நாட்டியரா மாநுஜனே
வல்லவனே வந்தெனையாள் வாய். (உ௩)

மாலரங்கர்க் கேழுமதின் மண்டபங்கோ யிற்பணிசெய்
சீலர்திரு மங்கையர்சீர்ச் செங்கமலக்—கால்மலர்கள்
உள்ளத் திருக்குமுய ருத்தமரா மாநுஜவென்
கள்ளத் திருக்ககற்றிக் கா. (உச)

பாரிற் பரசமயம் பாலிப்பார் கோளரியாய்
ஆரியநா லாகமங்க ளாலமைத்துப்—பேரருளால்
ஆதி வைணவரன் றுக்கியரா மாநுஜனே
கோதநல வந்தெனையாட் கொள். (உரு)

பன்மேழ் தினம்வாதம் பண்ணினவ னும்பணிய
மன்னரங்கர் மாயாவா தம்வாதி—யென்னவுரை
அற்புதத்தா லானந்த மாகியரா மாநுஜனே
நற்பதந்தந் தாள்வாயிந் நாள். (உசு)

ஆழ்வார்க ளாலருணு லாயிரத்தை யம்புவியில்
வாழ்வார்க் குதவவரம் வாங்கிவந்த—ஆழ்தவத்தோன்
நாதமுனி தாணளின நாடியரா மாநுஜனே
போதமெனக் கின்றே புரி. (உஎ)

செந்தா மரைநயனத் தேசுந் திருவதனத்
திந்தா ரொளியெழிலு மென்றடியேன்—சிந்தையினிற்
கண்டுகளிப் பேனினிய கற்பகரா மாநுஜனே
அண்டர்பிரா னேயெனையின் றாள். (உஅ)

பொய்யாம் பலசமயப் புன்மையர்புந் திக்கசட்டை
மெய்யாம் வைணவத்தா லேவிளக்கும்—ஐயாவுன்
அன்பர்க் கிகபரநன் றுக்கியரா மாநுஜனே
இன்புற் றெனையாள்வை யே. (உகூ)

கந்தசத்தன் மாபலிபோற் கண்ணன் கனகனையும்
வெந்தசத்தாய் வென்றுவிட்ட விண்டடியார்—சிந்தைமகி
ழாகப் பணிபுரியு மற்புதரா மாநுஜவென்
னாகப் பலபிணிதீர்த் தாள். (௩0)

முற்றிற்று.

——

உ

சிவமயம்.

திருப்பனசைப்

பெரியகருப்பண்ணசுவாமி பதிகம்.

திருவுலவு நவரத்ந மகுடவினு தற்றிலக
சேவைமதி வதன நகையுஞ்
சீர்கருணை யுங்கொடிய பார்வையு நிறைந்தபூத்
திட்டியுஞ் செந்த கர்க்கோட்

டுருவென முருக்குவனு மீசையு மலைப்புயத்
துத்தரிக வல்ல வாட்டு
மொளிமிகு மலங்கிருத வாபரண மூர்ச்சல்ல
டத்தோ டிருக்கு கச்சும்

மருவலர் தமைச்செருக் கின்றதண் டரிவாளும்
மஞ்சுகா யாவின் மலரும்
மருவுதனு கண்டுனது தாண்மலர் வணங்கவே
வாய்மையொடு கருணை புரிவாய்

கருதரிய பூசுரர்க ளரசர்தன வசியருங்
கைகுவிக் கின்ற விறைவா
கனகநிறை முகில்களுறை தருபனசை யிற்பெரிய
கருப்பண்ண சாமி முகிலே. (௧)

பூநாத னச்சுத னரவிற் றுயின்றவன்
புள்ளுலவு கேத னத்தோன்
புண்டரிக லோசனன் மாதவன் கேசவன்
புகலுந்தி பூத்த முதல்வன்

தேனுரு துளபமணி நாரணன் மாயன்மால்
திகிரியசி தண்டு சங்கு
செய்யதனு வாயுதன் மீனென மாகிச்
சிறந்திடுங் கூர்ம மாகி

வானரநர வரியாகி வாமனக் குறளாகி
வன்பரசு ராம ராமன்
வந்தபல பத்திரன் கண்ணனெனும் விண்டுகரு
மைந்தனை யென்னை யாள்வாய்
கானுடனைப்போலின் தெந்நாளு மேதனங்
காட்சிநல மேவி வளரக்
கனகநிறை முகில்களுறை தருபனசை யிற்பெரிய
கருப்பண்ண சாமி முகிலே. (௨)

ஜோதியென நிறைபரம பதநாத ருக்குரிய
சுகுணசுத னாகி வந்து
தூயதன வணிகர்பணி குலதெய்வ மாகியித்
தொல்லுலகில் நித்த நித்தம்
நீதிநெறி தவறாத பேய்வெட்டி காளைதன்
நீண்மரபி லாவேச மாய்
நிர்த்தனஞ் செய்துமெய்க் குடியடிமை யாளர்தம்
நெஞ்சினில் நினைத்த கேள்வி
ஓதியவ ரவர்கள்குறை யோட்டித் தனந்தனைய
ருண்மையுட னேய ளித்து
ஒருநாளு மழியாத சகலாப மேன்மைதந்
துதவிபுரி கின்ற தேவே
காதளவு தாவுவிழி மாதர்நடை யோதிமங்
கண்டுகற் றறிய மருவக்
கனகநிறை முகில்களுறை தருபனசை யிற்பெரிய
கருப்பண்ண சாமி முகிலே. (௩)

மஞ்சிலெழு மின்னலைக் கானல்நீ ரைப்புனல்
வரைந்திடு மெழுத்தை யொத்த
வாழ்வினி லழுந்தா தழுந்திக் கிடப்பனோ
வன்றுயர்க் காளா வனோ
தஞ்சமென மெய்யடிய னுவனோ நோயிற்
றளர்ந்துநா னுழலு வேனோ
தரைமீதி லாடியி னுழுந்துருளு மளவுமுன்
றாளினை வணங்க வறியா

வஞ்சனிவ னென்றெனைக் கருதாது சந்ததி
 வழித்தொண்டு புரியு முறையில்
 வந்தவ னெனப்பெருங் கருணைவைத் தின்றுநீ
 வந்திடச் சமய மையா
கஞ்சமலர் மாதுபா ரதியுமக லாமலெக்
 காலத்தி னுந்து லங்கக்
 கனகநிறை முகில்களுறை தருபனசை யிற்பெரிய
 கருப்பண்ண சாமி முகிலே. (ச)

என்றைக்கு நாமிருந் திடுவமென் றெண்ணிபிவ்
 வுலகத்தி லெந்த நாளும்
 இரக்கந் துறந்துவஞ் சனைகரவு பொய்கெடுதி
 யேற்றமுட னேபு ரிந்து
நின்றுமஞ் சாதமதி யினர்க ளநேகர்நாம்
 நெட்டூர வார்த்தை கூறி
 நித்தமு மரட்டரென வேமிக மிரட்டியூர்
 நிதிபுவியி லாசை வைத்து
ஒன்றுமறி யாதவேயு மடையரா லெனதுநெஞ்
 சுழலா திருக்க வரநீ
 யுண்மையொடு தந்துகாத் தழியாத சுகமென்மை
 யுதவிடத் தருண மிதுவே
கன்றைக் காத்தெடுத் தேவிழ வெறிந்தபூக்
 கண்ணனருள் கின்ற கடலே
 கனகநிறை முகில்களுறை தருபலசை யிற்பெரிய
 கருப்பண்ண சாமி முகிலே. (ரு)

பூவரச ரைப்பெரும் பொருளாள ரைக்கொடிய
 பொய்யரைப் புகல வரிய
 போதமிகு தெய்வங்க ளாகிய வநேகரைப்
 போற்றித் துதித்து நித்தம்
நாவுக் கிசைந்ததமி ழாலினிய பிரபந்தம்
 நாளுநா ளும் படித்து
 நானுமொரு பலனுமறி யாமலே குலதெய்வ
 நாதனென வுன்னை நாடிப்

பாவைப் பகர்ந்துநின் றேனடிமை மீதுநீ
பக்ஷம்வைத் தெந்த நாளும்
பாதுகாத் தென்குடி சிறந்திடப் பெருவாழ்வு
பாலிக்க வேண்டு மப்பா
காவிற் சொரிந்தமீதே னங்கழனி யிற்சென்று
கவினிலகு சாலி விளையக்
கனகநிறை முகில்களுறை தருபனசை யிற்பெரிய
கருப்பண்ண சாமி முகிலே. (கூ)

வானில்வரு மின்னற்ப்ர காசமே நிறைவால
மதிவிம்ப மாரி மேக
வள்ளலெனும் வஸ்துவே தாபந்த வேளைக்கு
வரமுதவி வந்து காக்கும்
ஈனமதி லாக்களை யினியரச மேகனிக்
கினியவமு தேயி சைந்த
வெழிற்கற்ப காடவிப் பூப்பெருக் கேநீல
மேயும் புயக்குன்ற மே
தேனிறைந் திலகுவன மாலிகைத் தொங்கலணி
தெய்வமே தேவ தேவே
செந்தமிழ்க் கினியவா முதவுகட லேயுனது
சேவைதந் தென்னை யாள்வாய்
ஈனமறை ஒலியின் விலக்கண விலக்கியக்
காதைபுரி வண்மை பெருகக்
கனகநிறை முகில்களுறை தருபனசை யிற்பெரிய
கருப்பண்ண சாமி முகிலே. (௰)

எந்நாளு மிந்நகரில் வீரகண் டானென
வெழிற்புன விலங்கு வாவி
இசையுமக் கினிமுலை யிற்கோவில் கொண்டநா
ளிதுவரையு னடியார் மீது
சன்னதம தாகிப் பணிந்தவர் கருத்தினைச்
சாற்றிப்ர சாத மீந்து
தருணமத றிந்துதவு கொண்டலே பூவினிற்
றன்னிகரி லாத மெய்யா

இந்நாளி லேயொன்று பேசாதி ருப்பதிக்
காலத்தி னியல்பு தானோ
இவ்வூரி னிற்கசடர் மிஞ்சிமுறை தப்பினு
ரென்னவுங் கருதி நின்றோ
கன்னெஞ்ச மாயிங் கிருந்திடுதல் நீக்கிநற்
கருணைப்ர வாக மீவாய்
கனகநிறை முகில்களுறை தருபனசை யிற்பெரிய
கருப்பண்ண சாமி முகிலே. (அ)

வந்தியு மிரந்துவாள் பித்தரு மிரங்குவார்
வன்பேயு மேயி ரங்கும்
வகைகெட் டுருட்டுப் புரட்டினைச் செய்கின்ற
வஞ்சருங் கொடிய ஜாதி
வந்தவறி வினரு மிரங்குவா ராகாத
மாவினையு மேயி ரங்கும்
மதிகெட்ட மடையர்புரி தீவினையி னுலடிமை
வாடுவ்து கண்டி ருந்துஞ்
சிந்தையாந் திருவுளஞ் சற்றேனு மிரங்காத
செய்கையிது ஞாய மில்லை
தெள்ளூற்ற செந்தமிழ்க் கினியவா மீகின்ற
தெய்வம்நீ யென்னை யாள்வாய்
கந்தமிகு பூம்பொழிற் பொய்கைசெந் தாமரைக்
காடுமலர் சொரியும் வளமுங்
கனகநிறை முகில்களுறை தருபனசை யிற்பெரிய
கருப்பண்ண சாமி முகிலே. (கூ)

மண்ணுலகி லெல்லோரும் வந்திக்கும் நின்னிரு
மலர்ப்பதம் போற்ற விலையா
மாசிலா நீயுமென் பாலிரும் பாகலா
மன்னுஞ் சரா சரத்தி
லெண்ணரிய யானைமுத லீயெறும் பாதியா
யெவ்வுயிரு மென்றும் வாழ
இச்சையொடு காக்கின்ற தொழிலாளி யாமுனக்
கெந்நாளு மென்றன் மாபார்

நண்ணுதொண் டாகவிச் சந்ததியில் வந்தவென்
நலிவினைத் தீர்ப்ப தரிதோ
நல்லதொரு வல்லமையி தாபேச மௌனமா
நவில்வாய் முத்துதிரு மா
கண்ணுறுதல் செய்தெனைக் காத்துரட் சிக்கவிக்
காலமிது சமய மையா
கனகநிறை முகில்களுறை தருபனசை யிற்பெரிய
கருப்பண்ண சாமி முகிலே. (௧௦)

கோலம்பி லாகவெவ் வுலகமு மளித்தபொற்
கொண்டல்கா மாக்ஷி யுமையுங்
கோதிலா தடியவர்க ளாபத்து வேளைக்
குறிப்பறிந் துதவு நிபுணன்
சீலமிகு காத்தமுத் தையன்முன் னோடியுந்
திறல்வீர பத்ர தேவுஞ்
செப்புமுனி யாசுசமை யன்சோணை யிருளனுந்
தேவிராக் காயி பேச்சி
ஆலவிழி நீலியென் றந்தையைக் கற்குற
டமைத்திடச் சொல்லி யென்னை
அருமையொடு தந்தெனது சந்ததி விளங்கவே
அருள்புரிந் தவனு மன்பர்
கூலம் தறிந்தானு காளியனை மேவுநற்
பந்தியிற் கர்த்த னாகிக்
கனகநிறை முகில்களுறை தருபனசை யிற்பெரிய
கருப்பண்ண சாமி முகிலே. (௧௧)

முற்றிற்று.

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

குன்றக்குடியென்னும் * மயூரகிரி
முருகக்கடவுள் பதிகம்.

காப்பு.

நேரிசை வெண்பா.

மாவனந்தன் மேற்றுயிலும் வாரணத்தா னம்மருகன்
காவனந்தங் காட்டுகுன்றைக் கந்தனுக்குப்—பாவுறுநற்
செந்தமிழா ரும்பதிகஞ் செப்பவரு மப்பரமன்
றந்தவருட் டந்திமலர்த் தாள்.

ஆசிரிய விருத்தம்.

பூமருவு சண்முகா பன்னிரு விழிக்குகா
புங்கவர்க டங்கு சமுகா
பூரண நிறைந்தசது ராரண வாரணப்
புகர்முகற் கிளைய புனிதா
காமன்மரு காசென்னி யாறுமுரு காவுனைக்
கண்டடி வணங்கி யுருகாக்
கல்லாத கன்மனப் பாவரெதிர் செல்லாத
கந்தனே மயில்வாக ன

* மயூரகிரி என்பது செந்தமிழ் நாடாகிய பாண்டிவள நாட்டின் கண்ணே சுப்பிரமணிய மூர்த்தியினது வாகனமாகிய (மயூரம்) மயில், அன்னம் கருடனென்னுமிரண்டு வாகனங்களையும் விழுங்கியதுபற்றி அவராலே சபிக்கப்பட்டு அச்சாபம் நீங்கும்பொருட்டு வந்து தவஞ் செய்து அது நீங்கப்பெற்றுத் தன்னொருவடிவம் பழைய வாகனமாந் தன்மையை யடைய மலைவடிவமாகிய மற்றொரு வடிவத்தினாலே அந்த மூர்த்தியை வகிக்கப்பெற்ற சரித்திரங் காரணமாக மயூரகிரியென்னும் திருநாமம் பெற்றது.

சோமனணி வேணியரன் மாமக னெனுஞ்சுப்ர
மண்யவீ ராறு தோளா
துங்கமிகு மங்கையுமை யங்கையி லெடுத்திடுஞ்
சுந்தரா வன்பர் சிந்தை
நீமயம தாகியநி ராமயா பூமயல்
விளைந்தவெனை யாள வருவாய்
வென்றிமயின் மீதுவரு குன்றையிறை வாகிரியை
வென்றவடி வேன்முருக னே. (க)

சித்தமதி னித்தநினை பத்தரித யத்தினுந்
திருவாவி னன்குடியி னுஞ்
செந்தினக ரத்துமெழில் தந்ததிரு வேரகஞ்
சீர்பரங் குன்ற மதினுஞ்
சித்தர்நட னத்தினொடு முத்திபெற நத்திபுறை
செய்யபழ முதிர்காவி னுஞ்
செண்டுமுலை விண்டுகுழல் கண்டுமொழி கொண்டபொற்
றெய்வானை வள்ளி மகிழக்
கொத்தல ரலங்கன்மகு டத்தினுடன் நத்தலறு
குன்றுதோ றாட றனினுங்
கொடியதொழி லசுரர்குல மடியவெங் கெங்கணுங்
கோலமுட னேடி நாடி
மெத்தவும் வருத்தமுறு பத்தனென கத்தினும்
மேவுநளி னத்த டத்தோய்
வென்றிமயின் மீதுவரு குன்றையிறை வாகிரியை
வென்றவடி வேன்முருக னே. (உ)

இந்திரவி தன்னிலை தவிர்ந்துபுவி மீதினிலு
திர்ந்திடினு மென்று மழியா
வெண்டிசையின் மண்டுகிரி யுங்கிரியு நாகங்க
ளெட்டுமிடம் விட்ட கலினுஞ்
சிந்துதல முந்தவறி யந்தமறை தந்தமொழி
சிந்திடினு மேமே மெனச்
செப்புமுல கப்பெருமை தப்பிவிடி னும்பெரிய
சேடர்தலை யாடி விடினும்

நந்தாதி ருந்துல வருந்தவ மழிந்திடினு
நாடரிய வஸ்தொளிக டா
நாட்டமு ளடங்கியுங் கூட்டவூ ழிக்காலு
நாஸ்தியை யடைந்து விடினும்
விந்தையொடு கந்தவுன தருளுக்கு மன்பர்மன
துறுதிக்கு மீத லுண்டோ
வென்றிமயின் மீதுவரு குன்றையிறை வாகிரியை
வென்றவடி வேன்முருக னே. (௩)

அஞ்சம துறைந்திடு விரிஞ்சனுங் கஞ்சமல
ராசனத் திருமார்ப னும்
அண்டர்களு மெண்டிசைநி றைந்தவரும் வந்துசிவ
னங்கழ றனைத்து தித்து
வஞ்சமிக நெஞ்சினுறை யுஞ்சூர னுஞ்சமர்
வருத்துதலி லஞ்சி நின்ற
வாட்டம தகற்றவருள் கூட்டிவழி காட்டுவாய்
வள்ளலென வாழ்த்த வானும்
அஞ்சலென வுஞ்சொலிம னஞ்சலன மானதை
யகற்றுவோ யென்ன வமலன்
அக்கினி நுதற்சக் குதுக்கவக் கனலினை
யமர்ந்தவெண் மருத் தெடுத்து
மிஞ்சுபுன லஞ்சரவ ணத்திடச் சேயான
விண்ணவா வென்னை யாள்வாய்
வென்றிமயின் மீதுவரு குன்றையிறை வாகிரியை
வென்றவடி வேன்முருக னே. (௪)

வாசமிக வீசுதரு நேசன்வன மோசமாய்
வாடுத லறிந்து நொந்து
வந்துகழ லந்துதி புரிந்துமன முந்துகுறை
வாய்மையுட னேயு ரைக்கத்
தேசுலவு பூசுரர்கள் காளையென வேசம்விசு
வாசமுட னேதெ ரிந்து
தெள்ளுதமி முள்ளமதி லுள்ளபடி விள்ளுமுனி
செய்யசமு கத்த டைந்து

மாசில்கா கத்தின்மிசை பேசுகொடி யாய்ப்புனல்
வரும்படி கவிழ்த்து விட்டு
வந்தமத தந்திமுக னுந்துணை யெனச்சிந்தை
வைத்துமகிழ் முத்தி முதலே
வீசக மிசைப்பாசு வாசநிறை தாசனெனை
மேவியின் றருள வருவாய்
வென்றிமயின் மீதுவரு குன்றையிறை வாகிரியை
வென்றவடி வேல்முருக னே. (ரு)

நாகமெழி லாகமிசை யோகையணி யாகவு
நஞ்சினை மிடற்றில் வைத்தும்
நத்தன்வன சத்தனறி யாவிறைவ னாகியு
நங்கையைப் பங்கில் வைத்தும்
மாகனக மேருதனு வாகவும் வளைத்துமழு
மானினைப் பாணி யேய்ந்தும்
மத்தகரி யைத்தனது மத்துடனு ரித்ததனை
வத்திரமெ னத்த ரித்தும்
மாகவெளி யெத்திசையு மேகவொளி யாகியென்
மனத்தினி லுறைந்த வீசன்
மைந்தனென வந்ததிரு வெந்தையே யுன்றனறு
மாமுகங் கண்டு பணிய
வேகமுட னுடிவரு தோகைமுது கேறிநகை
மேவியடி யேன்முன் வருவாய்
வென்றிமயின் மீதுவரு குன்றையிறை வாகிரியை
வென்றவடி வேன்முருக னே. (சு)

நாதாவ தீதாம னீதாவி னேதாபொன்
னுடக நடித்த பாதா
நஞ்சுமிட றஞ்சுமுகன் மஞ்சனென வஞ்சவினை
நைஞ்சுவிட வுஞ்செய் யிறைவா
நாதாநின் மீதோது பாதாபொ லாதார்க
ணட்பைவிட நன்மை தூதா
நந்துகொட னந்தன்மிசை யந்துயிலு கந்ததிரு
நாரண னுவந்த மருகா

தீதான மாதர்சுக வாதால நீதமதி
சோர்ந்துழலு கின்ற சிறிய
சித்தமதி னித்தியம நித்தியம தைத்தேறு
செவ்வறிவெ னக்கருளு வாய்
வேதாவென் ஞதிமுத லோதாத தேவென
வெகுண்டுசிறை யிட்ட விமலா
வென்றிமயின் மீதுவரு குன்றைபிறை வாகிரியை
வென்றவடி வேன்முருக னே. (எ)

மாவீர வாகுதிட தூவீர கேசரியன்
வாய்த்தவொரு வீராந்த கன்
வஞ்சர்மன மஞ்சவலி மிஞ்சிவிளை யாடிவரு
மன்வீர மாம கேந்த்ரன்
பூவீர மாகநிறை கோவீர தீரனும்
புகல்வீர மாம கேசன்
புந்தியில கந்தையர்கள் சிந்தைகள் வருந்தவே
புரிவீர ராக்கதனு மாய்
நாவீர மற்றவர்கள் போவீ ரெனக்கால
நாட்டினைக் காட்டி வாட்டும்
நன்றிதரு வீரமார்த் தாண்டனெறி னின்றிலகு
நல்வீர மாபு ரந்தரன்
மேவிவரு லக்கரிவ ராவியுறு துணையென
விரும்பிவரு வேத முடிவே
வென்றிமயின் மீதுவரு குன்றைபிறை வாகிரியை
வென்றவடி வேன்முருக னே. (அ)

சிங்கமுகன் வல்வீர சிங்காதி வீரனுந்
திமுகனும் வச்ர வாகும்
செங்கதிர்க் கோபனெரி பொங்குவிழி யாழியா
னனெனுந் தீய னஞ்சா
அங்கவொளி தங்குகய முகனுமற் றுருக
னடர்ந்திடுஞ் சகத்ர வாகும்
அறப்பகைஞ ருங்கா நிறப்படுஞ் சதமுகா
னிகமெனு மூவாயி ரர்

துங்கமிகு புங்கவரை யங்ககன நாடரைத்
துயர்செயுஞ் சூர பன்மன்
துட்டரெனு மிவர்களுயிர் விட்டுநம னூரினைக்
கிட்டவயி ரொட்ட முருகா
வெங்கலியி னும்பிணியி னுங்கலக மாகாமல்
வேலவா யெனையாளு வாய்
வென்றிமயின் மீதுவரு குன்றையிறை வாகிரியை
வென்றவடி வேன்முருக னே. (கூ)

அண்டமுத லெங்கெங்கு நிறைபிரம மாகியே
யாறக்க ரங்க ளாலும்
அதிதுரித மாகவுஞ் சகரத்தி னல்வான
மம்புவியை வசிய மாக்கி
மண்டிவரு தனமணிகள் அசரத்தி னல்வருக
வைத்துவலி யகா மதனல்
மருவுமிக பரமறிய வுஞ்செய்து ணகாத்தில்
மன்றம்ப னம்பு ரிந்தும்
மண்டலம திற்பகாம் வல்பிணி யகற்றமா
வஞ்சருயிர் வாங்க வகாம்
வளமான விச்சடுத் தொழிலுதவு சரவண
பவாவென வழங்கி நின்றாய்
விண்டலத் தரசன்மகள் தெய்வகுஞ் சரிவள்ளி
மேன்மயல் புரிந்த குழகா
வென்றிமயின் மீதுவரு குன்றையிறை வாகிரியை
வென்றவடி வேன்முருக னே. (கo)

முற்றிற்று.

வாழி.

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசி ரடியா ரெல்லாம்.

உ

சிவமயம்.

அரண்மனை சிறுவயல்

மும்முடிநாத ஈஸ்வரர் பதிகம்.

காப்பு—வெண்பா.

சீர்மும் முடிநாதத் தேவரடிக் கின்றடியேன்
பாரிற் றமிழ்ப்பதிகம் பாடவே--காரனைய
செய்யமத மூன்றுடைய தேசிகனு மைங்கரத்தோன்
றுய்யமலர்த் தாளே துணை.

நூல்.

ஆசிரியவிருத்தம்.

சுந்தரநி றைந்ததனு வுங்குலவு சோதியுந்
    தூயகதிர் மதியு மனலுங்
  தோற்றமெழி லேற்றமிகு நயனவொளி யுங்கடுத்
    துன்னுமிடர் கண்ணு மியல்புஞ்
சிந்தூர முவந்தபுண் டரநுதல லங்கிருத
    சீதநதி மேவு சடையுங்
  திடதடபு யர்ஜலத் திண்மையுறு வண்மையுந்
    தேசார்ந்த மார்பி னழகும்
வந்தடி பணிந்துபுரி வானவர்க ளன்பர்மிசை
    வைத்தவரு ளேனைக்க நிறைவும்
  வஞ்சமறி யாதபஞ் சானனத் திருவெனுள்
    வைத்திடக் கருணை புரிவாய்
செந்திரு வுறைந்துவெண் டாமரையி னிறைவாணி
    தேவிவள மேவி வளரச்
  செங்கமல மேற்குருகி னங்கடுயில் சிறுவயற்
    றேவமும் முடிநாதனே. (க)

ஏனவடி வானவின் டறிவதற் கரிதாகி
யெண்ணுதற் கரிய கானத்
திசைபுலவு வசையிலா நான்மறைக் கெட்டாம
லெவ்வுயிரும் வவ்வு நமனை
யீனமுற வும்புரிந் தானையட லுடலேறி
யேதமரு போத விசையன்
யிச்சைநிறை வேறவொரு கொச்சைவன வேடனு
யின்பமுட னே நடந்தும்
ஞானமய மானபொரு ளானதொரு மன்றில்நன்
னடக நடித்து நின்று
நாடரிய வீமமதி லாடியப தாம்புயம்
நாயினேற் கின்று தருவாய்
தேனையக லாதபொழில் வானுலவ வேனல்நற்
செந்நெல்வள மிகவு மேவச்
செங்கமல மேற்குருகி னங்கடியில் சிறுவயற்
றேவமும் முடிநாத னே. (உ)

சோதிவடி வேநாலு வேதமுடி வேயிலகு
சுடருருவ சோம னுமைத்
துரியதுரி யாதீத சகளநிஷ் களவிமல
• சுந்தரா தூய விமலே
பாதியை யனுதிநல் லாதிம னனந்தகுண
பரமனே நாத போதா
பாண்டரங் காசம்பு தாணுதிரி புரதகன்
பகவனே பரசு பாணி
கோதிலா வானந்த விறைவசங் கரநந்தி
கொன்றையணி குன்றை வில்லி
கூவாகை மேவிநின தடியர்பணி க்கக்கொள்ளக்
கொஞ்சமதி யேனை யாள்வாய்
சீதமலர் மோதுதரு மீதில்வரு தேனெலாஞ்
செஞ்சாலி சென்று பெருகச்
செங்கமல மேற்குருகி னங்கடியில் சிறுவயற்
றேவமும் முடிநாத னே. (ஈ)

அக்குமணி கொக்கரு கெருக்குகூ விளமேன
மம்புலி யமர்ந்த வேணி
ஆரரவு கங்கைதுடி சூலம்வெம் புலிமே
லடர்ந்தவலி யான அதளுஞ்
செக்கர்நிற முக்குதனு விற்கரியி னுரிவையுஞ்
சிரமலியு மாலை யழகுந்
திரிபுர மெரித்தசிறு நகையெயிற் பிரபையுஞ்
செய்யபுரி நூலி னெழிலுந்
தக்கதய வைக்கொடடி யர்க்குதவு கருணையுஞ்
சார்ந்திலகு வேத முதலே
தடதடென வந்தடையி லாதுனது தாசர்நிறை
சந்நிதி யெனக் கருளுவாய்
திக்கினுறை மக்கள்புக ழக்கனக மேன்மையுறை
செல்வர்செறி கின்ற வளமுஞ்
செங்கமல மேற்குருகி னங்கடுயில் சிறுவயற்
றேவமும் முடிநாத னே. (௪)

சேலைக் கடைந்தசின வேலைப் பழித்தவிழி
செய்யபவ ளத்தி னிதழுஞ்
சீர்தருவி னுதல்காது வள்ளைமதி வதனமுந்
தீங்கரும் பமுத மனுவைப்
பாலைக் கனிந்தமுப் பழவர்க்க முங்கிளிப்
பான்மைதரு கின்ற மொழியும்
பசியதென் னம்பதும மொட்டுமுடி வல்லுநற்
பம்பர மெனத்தி ரண்ட
கோலத்தை மேவுதன மாதர்க்கு ளாசைகொடு
கூவியலை யாம லெனையாட்
கொண்டடி வணங்கவரு ளின்றுபுரி வாய்குணக்
குன்றமே யண்ட ராசே
சீலத்தை நாடுதரு வானத்தை யேதேடு
செய்யவள முஞ்சி றந்துஞ்
செங்கமல மேற்குருகி னங்கடுயில் சிறுவயற்
றேவமும் முடிநாத னே. (௫)

கொஞ்சமதி யாளரைப் பேரறிவி னாரெனக்
கொண்டுவாய் பொத்தி யஞ்சிக்
கூசியுப் சாரமொடு கைகட்டி யானுட்
குறித்ததைக் கூற வந்த
வஞ்சப் பெரும்புரட் டறிவின ருங்கொடிய
வார்த்தையே சொல்வ தன்றி
வளமான வின்மொழி வழங்காத கொடுமையால்
வாடினு னித்த நித்தம்
நெஞ்சகம திற்சலன மிஞ்சாது காக்கவே
நேசமுட னேயி ரங்கி
நீலியுமை கருணைக டாக்ஷியென தன்னையொடு
நேரில்நீ வருதல் வேண்டுஞ்
செஞ்சாலி யுங்கமு கினங்களுந் தேங்கியே
சிறந்துவளர் மேன்மை பெருகச்
செங்கமல மேற்குருகி னங்கடியில் சிறுவயற்
றேவமும் முடிநாத னே. (சு)

தேடித்தி ரிந்தலேந் திட்டுபொரு ளென்கையிற்
சேருமது தன்னை நிதமுஞ்
சிந்தைக்கி சைந்தபடி யேசெல வழித்துநான்
றியருக் கீவ தன்றிப்
பாடிப் படித்துவரு நாவலர்க் குன்னடிப்
பத்தருக் குதவி செய்யப்
பகரரிய நல்லறிவு நற்குணம் பழகாது
பாரதனி லலேதல் முறையோ
வாடாத வடவா விருந்தே யருந்தவம்
வாஞ்சித்த நால்வ ருக்கு
வண்மையுட னுண்மையைச் சொல்லாது சொன்னவா
வாழ்வெனக் கருள வேண்டுந்
தேடரிய பூசுரர்க ளரசர்தன வசியர்நாற்
செல்வர்களு மேன்மை பெருகச்
செங்கமல மேற்குருகி னங்கடியில் சிறுவயற்
றேவமும் முடிநாத னே. (எ)

எள்ளளவெ னும்பொழுது முள்ளமதி னுன்மல
ரிணைந்தசே வடியை யென்று
மெண்ணித் துதித்துமல ரேற்றியர்ச் சனைசெய்ய
வேதுமறி யாத விந்தக்
கள்ளக் கருத்துநாய்ப் பித்தனைப் பேயனைக்
காசினிபி லாள்வ தற்குக்
ககனமுகி லாகிவந் தருண்மாரி பெய்தெனைக்
காக்கின்ற கால மெதுவோ
வெள்ளத்தை வில்வத்தை வெண்மதி கடுக்கைநல்
வெள்ளெருக் காறு தும்பை
வேணிக் கிசைந்தபூ ணுயணியு மெந்தையென்
மேற்கருணை செய்ய வேண்டுந்
தெள்ளூற்ற நற்றமிழ்ப் பாவலர்கள் காவலர்கள்
சேர்ந்துலவு வண்மை செறியச்
செங்கமல மேற்குருகி னங்கடுயில் சிறுவயற்
றேவமும் முடிநாத னே. (அ)

பாரிற் பணிந்துனது பாதமலர் மீதுபா
மாலைபுனை பாவ லர்க்குப்
பக்ஷமுட னருள்பௌவ மீயிருக் கத்திருப்
பாவையுன் பங்கி ருக்கச்
சாரெனு மதக்கயக் கணபதி யிருக்கவேற்
கந்தனொரு பக்க நிற்கக்
ககனவிண் ணவர்நிறைய நிற்கநந் தீசருங்
கைப்பிரம் போடு நிற்கப்
போரைத் தரும்பகைவர் மீதே வெனத்திறற்
பொன்வீர பத்ர னிற்கப்
பூவடுக னிற்கவென் மீதுவஞ் சகர்செய்த
புன்மையது வந்தணுகு மா
சீருற்ற விடைமீது வந்தடிமை நெஞ்சகஞ்
சேர்துயர நீக்கி வைப்பாய்
செங்கமல மேற்குருகி னங்கடுயில் சிறுவயற்
றேவமும் முடிநாத னே. (கூ)

பாமரர்கள் பண்டிதர்க ளேத்துநின் பங்கயப்
பாதமலர் போற்ற விலையா
பாமாலை யுன்மீது சாற்றவிலை யாவெனது
பக்கல்நீ கற்பாறை யா

பூமீ திரும்பா வெறும்புகடை யானையைப்
புகலுஞ் சராச ரத்தைப்
புன்மையடை யாதுகாத் தாளுமுத லேநெடும்
போதெலா முன்னை நம்பிக்

காமதக ளுசங்க ராபரம கருணு
கரக்கடவு ளென்று நித்தங்
கருதுமெனை யாளவெகு தூரமோ காதமோ
காத்திடச் சமைய மையா

சேமருவு கொன்றையணி வேணியை யானனச்
செம்பவள மேனி யிறைவா
செங்கமல மேற்குருகி னங்கடியில் சிறுவயற்
றேவமும் முடிநாத னே. (கC)

முற்றிற்று.

———

உ

சிவமயம்.

கணபதி துணை.

பாகநேரி

புல்வா நாயகியம்மன் பதிகம்.

காப்பு.

செந்திருவும் பாமகளுஞ் செய்பவளஞ் செய்பாகை
சுந்தரிபுல் வாயமைமேற் சொல்பதிகம்—அந்தமுற
மாகடலை யுண்டமுனி வண்கரக நீர்கவிழ்க்கக்
காகவடி வானவன் காப்பு.

நூல்.

ஆசிரியவிருத்தம்.

திங்களா னனிகால மர்த்தனி ஜடாதரி
திரிநயனி யுவதி குமரி
செய்யநவ கண்டமண் டலியுமா சத்திமா
தேவிகங் காளி விமலி
மங்கைவயி ரவிகௌரி யம்பிகை மதங்கிகௌ
மாரிமுப் புரச மாரி
மயிடமர்த் தனிசிங்க வாகனி வராகியபி
ராமிமலை மாது கன்னி
துங்கநா ரணியால பானசாம் பவிபிலை
சுந்தரி சடாக்ஷ ரத்தி
தூயநவ கோணிஜெக மோகினி திகம்பரி
சூலியனு கூலி வாலை
பங்கய விலோசனப் பரமகரு ணாகரி
பண்ணமிர்து பானன் மதுவைப்
பாகைத் தருந்தண்மொழி மாதர்க் கணங்குலவு
பாகைப் பதிப்புல் வாயே. (க)

மஞ்சுலவு நின்றனு வனப்புநீ லோற்பல
மதாய்மருவு கின்ற நயன
வாளொளி நுதற்சிலைக் குறுநகை யெயிற்றாள
வண்டுவ் ரிலங்கு மிதழும்
அஞ்சுகக் குயின்மொழி மயிற்சாய லுஞ்சந்த்ர
வானனத் தெழிலு மடியார்க்
கஞ்சா தனுக்கிரகம் புரிபார்வை யும்பகைவ
ராவிகவர் கின்ற புயமும்
வஞ்சருபி ருண்டுமண் டியசூல கோலமும்
வாய்மைநவ ரத்ன வணியும்
வண்ணவிழை யாயிரம் பொன்பெற்ற பாசிலா
மாவிடையி லிலகு முடையும்
பஞ்சுக மலத்தலர் நிகர்த்திடும் பாதமும்
பார்த்துத் துதிக்க வருள்வாய்
பாகைத் தருந்தண்மொழி மாதர்க் கணங்குல்வு
பாகைப் பதிப்புல் வாயே (உ).

அன்னையே யானந்த மானமபி லேநல்
லடைக்கலங் காத்த நாட்டில்
அம்புயத் திருமாது வாணிவள முங்குலவ
வஞ்சாத நாடு நகரந்
தன்னிகரி லாத்தனத னென்னவும் புத்திரர்கள்
சம்பத்து மிகவு மோங்கத்
தப்பாம லேதிங்கள் மும்மாரி பொழியவுஞ்
சாலிபொலி தந்து பெருகக்
கன்னல்கமு கெனவளர்ந் தோங்கவுந் தண்டலைக்
கண்ணிருந் தொழுகு தேன்கள்
கழனியெங் கும்பெருகி யேமகிழ்ந் தோடவுங்
கருணைபுரி கின்ற முகிலே
பன்னகப் பாயலம லிப்பரம் பதநாத
பண்ணவர்க் கிளைய தாயே
பாகைத் தருந்தண்மொழி மாதர்க் கணங்குல்வு
பாகைப் பதிப்புல் வாயே. (ந.)

மலருக்குள் வாசமு மெள்ளுக்கு ளெண்ணெயு
மன்னுதங் கத்தி னொளியும்
மறைதரும் பொருளுக்கு விளைவுமாய் விளைவுக்கு
ளறிவுமாய் மாசி லாது
இலகுமொளி யாம்பூத பௌதிக மனைத்துமே
யின்பப் பரஞ்சோதி யே
ஏதமறு மெய்ஞ்ஞான பரமநிலை யேயெவரு
மெண்ணுதற் கரிய தேவே
செலவிலா மூலாக மச்சுடர் விளக்கெனத்
தேவரும் புவியில் நிதமுஞ்
சிந்தையி னினைந்துநாக் கொண்டுதுதி புரிகின்ற
தெய்வமே யென்னை யாள்வாய்
பலசந்த னிற்றருக் கனிமதுக் காலினிற்
பண்புடன் சென்று பெருகப்
பாகைத் தருந்தண்மொழி மாதர்க் கணங்குலவு
பாகைப் பதிப்புல் வாயே. (௫)

நெஞ்சத்தி லேசற்று மீரமில் லேனுறுதி
நிலையிலே னீணி லத்தில்
நின்றவர்க் கோருதவி யில்லேனை நன்னெறியில்
நில்லேனை நீத மில்லா
வஞ்சநிறை கள்ளத்த னத்தனனு ளத்தனுப்
வாழ்ந்திடக் கருணை வைத்து
வந்தெந்த நாளென்வினை தீர்ப்பதெந் நாளெனுடல்
வன்பிணி கடப்ப தெந்நாள்
அஞ்சத்தன் வெள்ளியிப மூர்தருக் காவலா
கண்டலன் முதற் றேவர்கள்
அனுதினமும் வந்துதுதி புரியுமன மேயென
தகத்துய ரகற்றி யாள்வாய்
பஞ்சரத் தாருசுக வார்த்தைகற் கண்டினிய
பால்பழ மதைப் பழித்த
பாகைத் தருந்தண்மொழி மாதர்க் கணங்குலவு
பாகைப் பதிப்புல் வாயே. (௬)

அம்புயத் தலரின்மிரு தானவு னடித்துணைக்
கன்புகொண் டாடி வாழ்த்தி
அனவரத முங்கனவு நினைவிலெக் காலத்து
மாசையுட னேசம் வைத்துப்
பம்பரமெ னச்சுழன் றலையுமன முலையாமற்
பக்ஷமுட னுட்ப தித்துப்
பண்பொடு தியானித்து நின்றுதொழு தழுதுகண்
ணீர்பகரொ ணாது சொரியத்
தம்பமென நின்றுமன துருகவுட லிளகவுயிர்
தான்குழைய நெக்கு நெக்காய்த்
தரணிதனி லேய்புருகி ஆனந்த மானமழை
தாராள மாய்ப் பொழிந்து
பம்புசெய் யேன்கிருபை பாரெனப் பணியெனைப்
பார்த்துரட் சிக்க வேண்டும்
பாகைத் தருந்தண்மொழி மாதர்க் கணங்குலவு
பாகைப் பதிப்புல் வாயே. (௬)

எள்ளள வெனும்பொழுது நின்னிரு மலர்ச்சரண
மிதயத் திருத்தி யேத்தி
யினியமலர் கொண்டருச் சனைசெய்ய ஒருமனதி
லாமலிப் பேய்ச்ச கத்தில்
விள்ளரிய வினையென்ற சேற்றுக் குழிக்குளே
வீழ்ந்துளறு பிச்ச னாகி
வீணாய்ப் பேயனென வேயலறி யெந்நாளும்
வெறிகொண் டுழன்று நாய்போற்
கள்ளக் கருத்துடைய பித்தனெனை யாட்கொளக்
கருணையொடு வருவ தென்றோ
கனமுகி லாகிவந் தருண்மாரி பொழிகின்று
காலமெது கடைய னுடலைப்
பள்ளப் படுத்தும் பிணித்துய ரகற்றியே
பாதுகாத் தென்னை யாள்வாய்
பாகைத் தருந்தண்மொழி மாதர்க் கணங்குலவு
பாகைப் பதிப்புல் வாயே. (௭)

சிசி

புல்வாநாயகியம்மன் பதிகம்.

சொல்கின்ற சொல்லெலாம் பொய்பேசி யேநிசஞ்
சொல்லாம லேமொ ழிந்து
துட்டருற வாகிநன் மார்க்கவழி நிரையிலாத்
தோய்மூட தத்து வத்துப்
பொல்லாத குழியிலே முழுகிக் கிடந்துமே
புன்மையுட னெந்த நாளும்
புகலரிய நோய்பிணியி னுலுமறி வீனர்கள்
புரிந்திடுந் தீங்கி னுலும்
அல்லலுற் றற்பகலு மலையாம லுன்னடிமை
யாளருக் கடிமை யாக
அருள்புரிந் தானந்த வெள்ளப் பெருங்கடலை
அடியனேற் குதவி புரிவாய்
பல்லவ நெருங்குதண் டலைகளுறை வாவிநாற்
பாங்கினு மிகுந்து மேவப்
பாகைத் தருந்தண்மொழி மாதர்க் கணங்குலவு
பாகைப் பதிப்புல் வாயே. (அ)

அன்னத் துருத்திமூத் திரமாரு கேணிதுர்க்
கந்தமக லாத வீட்டை
அநித்தசக டேர்மியை வஞ்சமன வந்தக
ணடித்துவிளை யாடு பந்தை
மன்னுமணி லக்கூட்டை யூற்றைப் புலாலை
மதமாரிக் குரோத வைப்பை
மாளுத கர்மானு போகத்தை நன்னெறியின்
மார்க்கமறி யாக்க லத்தாற்
முன்னிவரு மாற்றுக் கரைச்சிறு மரத்தைநிகர்
வாழ்வையே சொந்த மென்று
தொல்லுலகி லநியாய மாகநான் சுற்றிச்
சுகந்தனைக் கண்ட தில்லை
பன்னெறியி லின்னமலை யாமனல் வாழ்வுநீ
பாலிக்க வேண்டு மம்மா
பாகைத் தருந்தண்மொழி மாதர்க் கணங்குலவு
பாகைப் பதிப்புல் வாயே. (கூ)

மண்ணுலகில் மானிட ரெனச்செனித் திடவேண்டும்
வாய்மைமொழி பேச வேண்டும்
மன்னும்விசு வாசமது வேண்டுமன நிலையொன்றில்
வளமாக நிற்க வேண்டும்
எண்ணரிய பலகலைப் பொருள்வேண்டு மிசைவேண்டு
மேற்றுசம் பத்து வேண்டும்
எவருமே பழியாத நலம்வேண்டு மேழையெளி
யோருக் கிரங்க வேண்டும்
வண்ணமுலை யாராசை விடவேண்டு மீசுரன்
வண்சரிதை கேட்க வேண்டும்
மாறாத நல்லறிவு தெய்வவந் தனைதருமம்
மருவுகுல நலனும் வேண்டும்
பண்ணவர்க் கினியபணி விடைவேண்டு மிவையெலாம்
பற்றாத வென்னை யாள்வாய்
பாகைத் தருந்தண்மொழி மாதர்க் கணங்குலவு
பாகைப் பதிப்புல் வாயே. (கo)

முற்றிற்று.

உ
மீனலோசனி
பிரஸ்,
மதுரை.